மங்கள வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 22 வியாழக்கிழமை (08 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 12

இன்றைய அறிமுகம்
நாளைய நாகரிகம்!!
ஆதிக்க ஆடைகளில்
சோபிக்க சோபனா
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

# யுத்த நிறுத்த முடிவு பற்றி அரசு தலைவர் பிரபாகரனுக்கு கடிதம்

## பாதை திறப்பது குறித்தும் பிரஸ்தாபம்?

கொழும்பு, டிசம்பர் 8

பாப்பரசரின் விஜயத்தை ஒட்டி யுத்த நிறுத்தம் செய்வது தொடர்பான தனது முடிவு குறித்து ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

வடபகுதி மக்களுக்கு பாதுகாப்பான பாதை ஒன்றைத் திறப்பது குறித்து இந்தக் கடிதத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்த நிறுத்தம் மற்றும் பாதை திறப்பு விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அரசாங்கம் இரண்டாவது கடிதம் ஒன்றை நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) அனுப்பி வைத்ததாக நம்பகமாகத் தெரியவருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்றுக் செய்தி வெளியிட்டது.

விடுதலைப்புலிகளின் தலைவர் திரு.வே. பிரபாகரனுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இக் கடிதம் நேற்று முன்தினமே விடுதலைப் புலிகளின் பிரமுகர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

மோதல்கள் நிறுத்தம்;

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சமிக்ஞையை அரசு எதிர்பார்க்கிறது!

கொழும்பு, டிச. 8

மிகவிரைவில் யுத்த நிறுத்தம் பிரகடனப் படுத்தப்படுமா என்பது —

அரசின் யுத்தநிறுத்த ஆலோசனைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து கிடைக்கவுள்ள சமிக்ஞைகளைப் பொறுத்தே இருக்கும்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா பாதுகாப்புச் சபையின் கூட்டத்தில் கலந்துகொண்ட பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் பின்னர் இவ்வாறு கருத்து வெளியிட்டதாக செய்தி ஏஜென்சி ஒன்று குறிப்பிட்டது.

இந்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்திலேயே அரசின் யுத்த நிறுத்த தீர்மானம் குறித்து முடிவு செய்யப்பட்டது என்பது தெரிந்ததே.

## இரகசியப் பேச்சாம்! தெற்கில் கண்டனம்

கொழும்பு, டிச 8

விடுதலைப் புலிகளுடன் அரசு இரகசியமாக கடிதங்களைப் பரிமாறி வருவதாக தெற்கில் உள்ள சிங்கள மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் பத்திரிகையாளரும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஜனாதிபதி பிரேமதாஸா புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது போலல்லாமல்— தாங்கள் புலிகளுடன் ஒளிவு மறைவின்றி பகிரங்கமாக பேச்சு நடத்துவோம்; பேச்சின் விவரங்களை அவ்வப்போது மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் பகிரங்கப்படுத்தப்படும். — என்று பொ.ஐ.மு. அரசு அறிவித்திருந்தது.

ஆனால் இப்போது இரகசியப் பேச்சுக்கள் நடக்கின்றன. புலிகளுடனான தொடர்பு பற்றிய விவரம் இரகசியமாக வைக்கப்பட்டுள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுப் பாதை திறக்கப்பட்டதாக அறிவிப்பு

கொழும்பு, டிச. 8

வடபகுதி மக்களின் போக்குவரத்துக்காக ஆனையிறவுப் பாதையைத் தாங்கள் திறந்துவிட்டிருப்பதாக ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் நேற்று அறிவித்தன.

இச் செய்தியை ஸ்ரீலங்கா அரசு தொடர்பு ஸ்தாபனங்களும் நேற்று வெளியிட்டன.

ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யும் பாப்பரசரைத் தரிசிப்பதற்காக வடபகுதி மக்கள் கொழும்புக்கு இப்பாதையூடாக வர முடியும் என்றும் படை வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

(உ-க-3-6)

# சந்திரிகாவின் அரசை கவிழ்ப்பதற்குச் சதி!

## அவரே வெளியிட்ட தகவல்

கொழும்பு, டிச. 8

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்க்க சதி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நேற்று தொழிற்சங்க மாநாடு ஒன்றில் உரை நிகழ்த்தியபோது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

''சர்வதேச மோசடிக்காரரும் உள்ளூர்ப் பதுக்கல்காரரும் உட்பட்ட மக்கள்விரோத சக்திகளே இந்தச் சதியில் ஈடுபட்டுள்ளன. அவர்கள் எனது அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளையும் சீர்குலைக்க முற்படுகின்றார்கள்.''

—என்று அவர் மேலும் கூறினார்.

தனியார் வர்த்தகப் பிரமுகர்களின் நடவடிக்கைகளினால் தென்னிலங்கையில் அத்தியாவசியப் பொருள்களின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளமை—

பல தொழில் நிறுவனங்கள் மற்றும் அரச துறைச் சேவைகளில் வேலை நிறுத்தம் இடம்பெற்று வருபவை—

ஆசிரிய சங்கங்கள் உட்பட பல தொழில் சங்கங்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்த முஸ்தீபு செய்து வருபவை—

தகவல் தொடர்பு சுதந்திரம் வேண்டி பொதுமக்கள் தொடர்பு ஸ்தாபனங்கள் பிரசாரப் போர் நடத்தி வருபவை—

ஆகியவற்றால் பலத்த நெருக்கடியை தாம் சந்தித்திருக்கும் இவ்வேளையில் சந்திரிகா இந்த அறிவிப்பை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# இலகுவான ஆனையிறவுப் பாதை இருக்கும்போது பூநகரி பாதையைநாம் ஏன் திறந்துவிட வேண்டும்?

## ராணுவத்தளபதி கேட்கிறார்

யாழ்ப்பாணம். டிச. 8

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு போக்குவரத்துச் செய்வதற்கு இலகுவான ஆனையிறவுப் பாதை இருக்கும்போது, கடல் வழிப்பாதையான பூநகரியை ஏன் திறக்க வேண்டும்?

— இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கிறார் இராணுவத் தளபதி ஜெரி. டி சில்வா.

பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயம் சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஒழுங்குகள் குறித்து ஆராய்வதற்காக நடைபெற்ற மாநாட்டில் வைத்தே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு கேட்டார்.

இந்த மாநாடு கடந்த 30 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. அமைச்சர் சி. வி. குணரத்னா மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

பாப்பரசரின் விஜயத்தின் போது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருக்கும் உயர் அதிகாரிகளும், ஆயர்மார்கள், குருமார்கள் ஆகியோரும் இம் மாநாட்டில் பங்குபற்றினர்.

யாழ். மாவட்ட கத்தோலிக்க மக்கள் பாப்பரசரைத் தரிசிக்க வசதியாக, அவர்கள் கொழும்பு செல்வதற்கு, பாதுகாப்பான பூநகரிப் பாதையை போக்குவரத்துக்குத் திறக்க வேண்டும் என்று —

மாநாட்டில் கலந்து கொண்ட யாழ் ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் கேட்டுக்கொண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி பாதையை திறக்குமாறு கோரி சந்திரிகாவிடம் யாழ். ஆயர் மகஜர்

யாழ்ப்பாணம், டிச. 8

வெளித் தொடர்பு அற்ற நிலையில் உள்ள 6 லட்சம் யாழ். குடாநாட்டு மக்களுக்கு பாதுகாப்பான பூநகரிப் பாதையை போக்குவரத்துக்கு திறக்கவேண்டும்.

யாழ். ஆயர் அதி. வண தோமஸ் சௌந்தரநாயகம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் கையளித்த மகஜரில் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

கொழும்பு சென்றிருந்த யாழ். ஆயர் ஜனாதிபதியை சந்திக்க முயற்சி எடுத்த போதிலும் அது கைகூடவில்லை. அதனால் அமைச்சர் சி.வி. குணரத்னா மூலம் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

அந்த மகஜரில் ஆயர் தெரிவித்துள்ளதாவது:

யாழ். குடாநாட்டு மக்கள் பாதுகாப்பான பாதை ஒன்று இல்லாததால் வெளிதொடர்பின்றி உள்ளனர்.

அவர்களுக்கான பாதை ஒன்றை வசதி செய்து கொடுக்கவேண்டியது உங்கள் கடமையாகும். உலக நீதியும், நியதியும் அதுவே.

யாழ். மக்கள் பாதுகாப்பாகப் பயணம் செய்ய ஏதுவாக பூநகரிப் பகுதியை பாதுகாப்பு வலயமாக — யுத்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாதை விவகாரம் குறித்து பாப்பரசருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், டிச 8

இலங்கைவரும் பரிசுத்த பாப்பரசரை தரிசிக்க யாழ் மாவட்ட கத்தோலிக்க மக்கள் கொழும்புக்குச் செல்வதற்கு பாதுகாப்பான பாதை இல்லாத நிலை குறித்து, அவரது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கொழும்பு சென்றிருந்த யாழ் ஆயர் அதி.வண. தோமஸ் சௌந்தரநாயகம் இது சம்பந்தமாக கொழும்பில் உள்ள பாப்பரசரின் பிரதிநிதி மூலமாக பாப்பரசருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தாம் கொழும்பில் இது தொடர்பாக எடுத்த முயற்சிகளையும் ஆயர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அதனோடு ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரின் பிரதியையும் பாப்பரசருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

(அ-3)

## ஆனையிறவு முகாமுக்குள் ஊடுருவல்?

கொழும்பு, டிச. 8

ஆனையிறவு இராணுவ முகாமுக்குள் ஊடுருவ புலிகள் முயன்று வருவதாகவும்—

அதனை அடுத்து அங்கு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும்—

பதுகாப்புத்துறை வட்டாரங்கள் நேற்று தகவல் வெளியிட்டன.

(உ-க-3)

தலைவர்களை குண்டுத்தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற

# ஸ்ரீலங்காவின் கொமாண்டோ படைக்கு பயிற்சி வழங்கி இந்தியா உதவும்!

## லக்ஷ்மன் கதிர்காமரின் புதுடில்லிப் பேச்சில் இணக்கம்

கொழும்பு, டிச. 8

ஸ்ரீலங்காவின் தலைவர்களை தமிழ்ப் போராளிகளின் குண்டுத் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவதற்காக விசேட கொமாண்டோ படை ஒன்றை அமைப்பதற்கு இந்தியா பயிற்சி மற்றும் உதவிகளை வழங்கும்.

ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் புதுடில்லித் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களின் போது இதற்கான இணக்கம் காணப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

பங்களாதேஷில் தமது மூன்று நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு அமைச்சர் கதிர்காமர் நேற்று இந்தியா வந்து சேர்ந்தார்.

புதுடில்லி அரசின் உயரதிகாரிகளுடன் நேற்று பேச்சுக்களை ஆரம்பித்த அவர் இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள்சர்மா, பிரதமர் பி.வி. நரசிம்மராவ், வெளிவிவகார அமைச்சர் தினேஷ் சிங் ஆகியோருடன் விரிவாகப் பேச்சு நடத்த விருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இந்தியாவில் நான்கு நாட்கள் தங்கியிருக்கும் அமைச்சர் கதிர்காமர்—

அடுத்த ஏப்ரலில் இந்தியாவுக்கு விஜயம் செய்யும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு உரிய பாதுகாப்பு வழங்கல், காமினி திசநாயக்காவின் கொலை தொடர்பான விசாரணைகளுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இருவார கால நிவாரணம் உடனடியாக விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ். மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடியாக இருவார உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவிருக்கிறது.

உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லாத காரணத்தால், இடை நிறுத்திவைக்கப்பட்டிருந்த உலர்உணவு நிவாரண விநியோகம் மீண்டும் இவ்வாரத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

செப்டெம்பர் மாதத்தின் கடைசி இரு வாரங்களுக்குரிய நிவாரணத்தை உடன் வழங்குமாறு ப.நோ.கூ. சங்கங்களுக்கு நேற்று யாழ். செயலகம் அறிவித்தது.

அரிசி, சீனி, பருப்பு, பால்மா ஆகியன நிவாரணமாக வழங்கப்படவிருக்கின்றன.

அடுத்த வாரம் ஒக்ரோபர் மாதத்துக்கான நான்கு வார நிவாரணப் பொருள்களும் ஒரே தடவையில் வழங்கப்படவிருக்கின்றன.

திங்கள் இரவு றாகமவில் வைத்து

# யாழ்தேவியை மறித்து சோதனை: 5 பெண்கள் உட்பட 13 தமிழர் கைது!

கொழும்பு, டிச 8

கடந்த திங்களன்று இரவு வவுனியாவிலிருந்து கொழும்புக்கு வந்துகொண்டிருந்த ''யாழ்தேவி'' ரயிலை றாகமவில் தடுத்து நிறுத்திய பாதுகாப்புப் படையினர் ரயிலில் சல்லடை போட்டு தேடுதல் நடத்தியதாக அறிவிக்கப்படுகின்றது.

இத்தேடுதலின் போது யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவர்கள் எனக் கருதப்படும் ஐந்து பெண்கள் உட்பட 13 பேர் இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்; அவர்கள் தற்போது பேலியகொடைப் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து புலிகள் வந்திருப்பதாகக் கிடைத்த துப்பைத் தொடர்ந்தே ரயில் மறிக்கப்பட்டு விசேட தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் —

கைதானோர் கொழும்புக்கு வருவதற்கான காரணம் குறித்து உண்மையான தகவல் எதனையும் தெரிந்துகொள்ள இயலாதுள்ளதாகவும் —

மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

## குடும்ப அட்டை திருத்த கால எல்லை தளர்வு

பொதுமக்கள் குடும்ப அட்டை பெற்றுக் கொள்ளும் வசதி கருதி, குடும்பப்பதிவு அட்டை திருத்தம் செய்வதற்கான கால எல்லை மறு அறிவித்தல் வரை தளர்த்தப்பட்டுள்ளதாக யாழ். [illegible] குவரத்துக் கண்காணிப்புப் [illegible] குடும்ப அட்டை [illegible] பகுதியினர் பொதுமக்களின் கவனத்திற்கு அறியத் தந்துள்ளனர்.

குடும்ப அட்டை திருத்தம் தொடர்பான முன்னைய அறிவிப்பு கடந்த ஜூலை [illegible] ஆம் திகதி வெளியாகியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

# இரண்டாவது தொகுதி வினாத்தாள்கள் வந்தன

யாழ்ப்பாணம். டிச. 8

தற்போது நடைபெறும்- ஜி.சி.ஈ (சாதாரண தர) பரீட்சைக்கான- இரண்டாவது தொகுதி வினாத்தாள்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

விமானம் மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்ட இந்த வினாத்தாள்கள் அங்கிருந்து காங்கேசன்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் ''கோமாரி'' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டன.

இறுதிநாள் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் இன்னும் அச்சிட்டு முடியாததால் எடுத்து வரப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

''மாஹோ'' கப்பலில் வந்துள்ள

## 7,000 பரல் மண்எண்ணெய் உடன் இறக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிச 8

காங்கேசன்துறையில் 7 ஆயிரம் பரல் மண்எண்ணெயுடன் தரித்து நிற்கும் 'மாஹோ' கப்பலை பருத்தித்துறைக்குக் கொண்டு வந்து மண்எண்ணெய் பரல்களை அவசரமாக இறக்க யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிச்சந்தையில் நேற்று மண்எண்ணெய் விலை லீற்றர் ஐம்பது ரூபாவாக விற்கப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

தற்போது பருத்தித்துறை துறையில் நல்ல நிலையில் இருக்கும் இழுவைப் படகு 'கோமாரி' கப்பலில் இருந்து இறக்கப்படும் பொருள்களை ஏற்றி இறக்குவதற்குப் பயன்படுத்தப்படுவதால் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு பல்கலைக்கழகத்தில்

## சமாதானத்தை வலியுறுத்தி புகைப்படக் கண்காட்சி

கொழும்பு, டிச. 8

சமாதானமே இன்றைய தேவை என்பதை வலியுறுத்தும் புகைப்படக் கண்காட்சி ஒன்று கொழும்பு பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில் கடந்த திங்கள் செவ்வாய் இரு நாட்களும் நடைபெற்றது

''யுத்தம் வேண்டாம். அதற்கு இனமத பேதம் கிடையாது. யார் கண்களில் இருந்து சிந்தினாலும் கண்ணீர் ஒன்றே''— என்பதை சித்திரிக்கும் புகைப்படங்கள் அக்கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

யுத்தம் அகதிகளையே உருவாக்கியுள்ளது. இனப்பிரச்சினை யுத்தத்துக்கு இது வரை 25ஆயிரம் கோடி ரூபா செலவாகியுள்ளது. பல்லாயிரக்கணக்கான மக்களும் படையினரும் இதில் கொல்லப்பட்டுள்ளனர். பல கோடி ரூபா பெறுமதியான சொத்துகள் மற்றும் உடைமைகள் யுத்தத்தினால் அழிந்து போய் விட்டன என்பதும் அக்கண்காட்சியில் வலியுறுத்தப்பட்டது.

கடந்த காலத்தில் காணாமற்போன அல்லது கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஏனையோரை நினைவு கூருமுகமாக இக் கண்காட்சி நடத்தப்பட்டது. (ஐ-எ)

## லஞ்சக் குற்றவாளிகளுக்கு ஐ.தே. கவில் இடமில்லை

### ரணில் அறிவிப்பு

கொழும்பு, டிச. 8

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் நியமித்துள்ள நிரந்தர லஞ்ச ஆணைக்குழுவினால் குற்றவாளிகளாகக் காணப்படும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு கட்சியில் எவ்வித பதவியும் வழங்கப்படமாட்டாது.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐ தே. க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இத்தகவலை கண்டியில் செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

இதே வேளை கட்சியினரால் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள சில முன்னணி உறுப்பினர்களை, அவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் தாம் வெளியேற்றப் போவதாகவும் ரணில் தெரிவித்திருக்கிறார்.

இந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் போது அதற்கு ஆளாகுபவரின் பதவி, அந்தஸ்து கவனிக்கப்படமாட்டாது என்றும் அவர் கூறினார். (இ-எ)

## எம்பிலிப்பிட்டி சம்பவம்: பெப்ரவரியில் விசாரணை

கொழும்பு, டிச. 8

எம்பிலிப்பிட்டி பாடசாலை மாணவர் படுகொலை வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறும் என்று இரத்தினபுரி பிரதம நீதிவான் சரத் குணதிலக அறிவித்தார்.

கடந்த முதலாம் திகதி இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது திகதிகள் நிர்ணயம் செய்யப்பட்டன.

செப்ரெம்பர் 4ஆம் திகதி ஆரம்பமாகி 7ஆம் திகதி முடிவடையும் விசாரணை மீண்டும் அந்த மாதம் 25ஆம்திகதி ஆரம்பமாகி விசாரணை முடிவடையும்வரை நடைபெறும் என்றும் நீதிவான் அறிவித்தார்.

இவ்வழக்கில் 1 - 8 - 1989க்கும் 30 - 1 - 1990க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 25 மாணவர்களைக் கடத்திச் சென்று சட்டவிரோதமாக தடுத்து வைத்து கொலை செய்தனர் அல்லது கொலை செய்ய அனுமதித்தனர் என்று பாடசாலை முன்னாள் அதிபர் ஒருவர் உட்பட எட்டு இராணுவத்தினர்மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கை நடத்த சட்டமா அதிபர் சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஒருவரை நியமித்துள்ளார்

கடந்த தவணையின் போது எதிரிகளிடம் குற்றப்பத்திரிகைகள் கையளிக்கப்பட்டன. (ஐ-எ)


## தொழிநுட்பக் கல்லூரி அனுமதி - 1995

### தேசிய கைப்பணிச் (தொழில்) சான்றிதழ் கற்கை நெறிகள்

மேற்படி விடயம் சம்பந்தமாக 1994 - 11 - 11 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு 10ஆம் ஆண்டைப் பூர்த்தி செய்தவர்களும் 1994 - 12 - 23 ஆம் திகதிக்கு முன்னர், அதிபர், தொழிநுட்பக்கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1 மேசன் கற்கைநெறி — ஒரு வருடம் (பகல்)
2. மரப்பொறியியக்க வல்லுனர் கற்கை நெறி — ஒரு வருடம் (பகல்)
3. நீர்க்குழாய் கற்கைநெறி — ஒரு வருடம் (பகல்)
4. மின்னியலாளர் கற்கை நெறி — இரு வருடங்கள் (பகல்)
5. பொருத்து வல்லுனர் கற்கைநெறி — இரு வருடங்கள் (பகல்)

க. ஜெயரத்தினம்,
அதிபர்.

தொழிநுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
1994 - 12 - 07

(சி-9898]


## ஓராண்டு நீங்கா நினைவு



மண்ணில்: 19 — 12 — 1916

விண்ணில்: 08 — 12 — 1993

திருமதி
**குணநாயகம் அந்தோனியாப்பிள்ளை**

அறிவுடன் இறை அன்பையும், ஆற்றலையும்
அள்ளியே எம்மவர்க்கு அளித்திட்ட அன்புருவே
அம்மாவே! அம்மாவே!
விண்ணுலகில் நீங்கள் வாழ்ந்தாலும்,
மண்ணுலகில் நாங்கள் நிதம் வாடுகின்றோம்
உங்கள் நினைவால்

இவரது ஆன்ம சாந்திக்காக நாளை (09-12-94) வெள்ளிக்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

உங்கள் ஒளியின்றி வாழும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

111, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

(34094)

ஜனவரிக்கு முன் புதிய சம்பளத் திட்டம்:

# வாக்குறுதியை அரசு மீறினால் விரைவில் தொழிற்சங்க நடவடிக்கை

### ஆசிரியர் சங்கத் தலைவர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 7

ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத்திற்கு உறுதியளித்தபடி இலங்கை ஆசிரிய சேவையையும் புதிய சம்பளத் திட்டத்தையும் எதிர்வரும் ஜனவரியில் அரசு நடைமுறைப்படுத்தத் தவறினால் நாடு தழுவிய ரீதியில் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது ஆகிவிடும்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெற்ற ''ஆசிரியர்களின் கடமைகள், பொறுப்புகள், உரிமைகள், சலுகைகள்'' என்ற விடயம் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

ஆசிரிய சேவை தொடர்பான முழுமையான சட்டத்தை அரசு இன்னும் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தவில்லை. இது ஆசிரியர்களுக்கும் ஆசிரிய சங்கங்களுக்கும் அதிருப்தியைத் தந்துள்ளது. புதிய சம்பளத் திட்டத்தை ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்துமாறு இன்று வரை சுற்றுநிருபங்கள் எதுவும் அனுப்பப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை—

ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்ட சம்பள உயர்வை திட்டமிட்டபடி ஜனவரியில் வழங்கும்படி வற்புறுத்துவதற்காக—

ஆசிரியர் தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு இன்று கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிக்சர்ட் பத்திரனவைச் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளது.

## எம். பியாக தேவராஜ் நேற்று பதவிப்பிரமாணம்

கொழும்பு மாவட்டத்தின் புதிய எம்.பியாக முன்னாள் ராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் நேற்று பதவிப் பிரமாணஞ் செய்து கொண்டார்.

சபாநாயகர் கே. பி. இரத்தினாயக்கா அவருக்குப் பதவிப் பிரமாணஞ் செய்து வைத்தார்.

கிரண்ட்பாஸ்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒஸி அபய குணசேகரா கொல்லப்பட்டதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே அவர் நியமிக்கப்பட்டார்.

இவருடன் சேர்த்து இ. தொ. காவின் எம்.பிக்களின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்தது. [ஐ-எ]

## பதுங்கியிருந்த படையினர் மீதே கிரனைட் வீச்சு!

### இயக்கச்சி சம்பவம் குறித்து தகவல்

கொழும்பு, டிச. 8

படையினர் தாக்குதல் நடத்தும் நோக்கத்துடன் பதுங்கி இருந்தபோதே இயக்கச்சியில் படையினர் மீது புலிகள் கிரனைட் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது,

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் படையினர் ஒருவர் கொல்லப்பட்டது தெரிந்ததே மற்றும் இரு படையினர் காயம் அடைந்தனர் (இ)

கல்வித்துறை அநீதிகள் பற்றி

## உயர்கல்வி அமைச்சுக்கு 15 ஆயிரம் முறைப்பாடுகள்

கொழும்பு, டிச. 8

1977 முதல் 1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் கல்வி, உயர்கல்வித் துறையில் அநீதி இழைக்கப்பட்டதாகக் கூறும் 15 ஆயிரம் முறைப்பாடுகள் கல்வி, உயர்கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இம் முறைப்பாடுகளை விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சு அண்மையில் விசாரணைக் குழு ஒன்றை நியமித்தது

இந்த குழு பொது அறிவித்தல் மூலம் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளைக் கோரியிருந்தது.

## தேசிய சேமிப்பு வங்கி வட்டி விகிதம் குறைப்பு

கொழும்பு, டிச. 8

தேசிய சேமிப்பு வங்கியும் பண வைப்புகள் மீதான வட்டி விகிதத்தை இந்த மாதம் முதல் குறைத்துள்ளது.

இதன்படி இதுவரை காலமும் ஒரு வருட நிலையான வைப்புக்கு வழங்கப்பட்டு வந்த 16 சதவீத வட்டி இனி 14 சதவீதமாகச் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் 2வருட நிலையான வைப்புக்குப் பணம் ஏற்கப்பட்டு வந்தது. இந்த நடைமுறை நீக்கப்பட்டுள்ளது.

மாதாந்த வட்டிக் கொடுப்பனவு அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த 15. 3 சதவீத வட்டி 13.2ஆகவும் குறைக்கப் பட்டுள்ளது.

சேமிப்பு வங்கிக் கணக்குகள் மீதான வட்டியும் ஜனவரி முதல் 14 சத வீதத்திலிருந்து 12 சத வீதமாகக் குறைக்கப் பட்டுள்ளது. (க)

முன்னாள் இந்திய ஜனாதிபதி

## ஜெயில் சிங் உடல்நிலை ஆபத்தான கட்டத்தில்?

புதுடில்லி, டிச. 8

முன்னாள் இந்திய ஜனாதிபதி ஜெயில்சிங்கின் உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கார் விபத்தொன்றில் சிக்கி காயமடைந்த அவர் கடந்த மாதம் 29ஆம் திகதி பஞ்சாப் தலைநகர் சண்டிகாரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுக் காலை அவர் மார்புச் சளியால் அவஸ்தைப் பட்டார் என்றும் — அரை மயக்க நிலையில் காணப்பட்டார் என்றும் தெரிவிக்கப் பட்டது. (ஐ-எ)

ஐ. தே. க. நிர்வாக சபைக் கூட்டம்:

## மோதிலாலின் உரை ஏற்படுத்திய சலசலப்பு!

கொழும்பு, டிச. 8

கடந்த சனிக்கிழமை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அலுவலகமான ஸ்ரீ கோத்தாவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி மோதிலால் நேரு ஆற்றிய உரை பெரும் சலசலப்பை ஏற்படுத்தி விட்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மோதிலால் நேரு பேசுகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் இனவிரோதச் செயல்களை வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் சமூக சேவை செயலாளராக திருமதி பத்மா மகாராஜா நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் —

இந்த நியமனம் குறித்து, ஐக்கிய தேசியக் கட்சி எம். பி ஒருவர் பொதுக் கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவிக்கையில்?'' ''ஜனாதிபதிக்கு ஒரு சிங்களப் பெண் கிடைக்கவில்லையா'' என்று கேள்வி எழுப்பினார் என்றும் — திரு மோதிலால் நேரு தமது உரையில் குறிப்பிட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் இனவாதப் போக்கை அவர் கண்டித்தார்.

மோதிலால் நேரு தமது உரையை முடித்து விட்டு மேடையில் இருந்து இறங்கி வந்த போது அவரை முதலில் கை குலுக்கிப் பாராட்டியவர் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவி ஹேமாவே.

மோதிலால் நேரு ஆசனத்தில் வந்து அமர்ந்ததும் இரு சிறுபான்மை இன அரசியல் வாதிகள் எழுந்து வந்து மோதிலாலுடன் கை குலுக்கிக் கொண்டனராம்.

இதனைப் பார்த்துக் கொண்டிருந்த கம்பஹா மாவட்ட பெரும்பான்மை இன எம். பி ஒருவர், அந்த இரு சிறுபான்மை இன அரசியல் வா[illegible] யாத வார்த்[illegible] திட்டித் தீர்த்தார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ர)

### நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை சிவஸ்ரீ செ. விசுவநாதக் குருக்களின் பண்ணிசையும், முருகன் பக்திப் பாடலும் இடம்பெறும் ஆசிரியர் திரு. சி. சிவலோகம் அறிமுகவுரையை நிகழ்த்துவார். (க)

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம்-1 இல் பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியருக்குமான தொழில் நுட்ப ஆக்கத்திறன் போட்டியில் பங்குபற்றியோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நாளை மறுதினம் 10ஆம் திகதி நடைபெறவிருந்தது.

பொதுத் தேர்வு காரணமாக இந்நிகழ்ச்சி பின்போடப்பட்டுள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை கல்விக் கோட்டங்களுக்கான நிகழ்ச்சி கனகரத்தினம் ம. ம. வியில் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெறும். சாவகச்சேரிக் கோட்டத்திற்கான நிகழ்ச்சி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி எதிர்வரும் 17 ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் (உ)

புத்தளம் தபாலகத்தில் கைகலப்பு!

## உயர் அதிகாரி கடித்தார்! கடி வாங்கியவர் கூச்சல்!!

கொழும்பு, டிச. 8

புத்தளம் தபால் நிலையத்தில் இரு உயர் அதிகாரிகளிடையே லீவு நேரத்தில் கடமையாற்றும் விடயம் தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் கைகலப்பில் முடிந்தது. அந்த இரு அதிகாரிகளும் ஒருவரை ஒருவர் மாறி மாறித் தாக்கத் தொடங்கினர்.

திடீரென்று ஒரு அதிகாரியின் பற்கள் மற்ற அதிகாரியின் கையை பதம்பார்த்தது.

அவ்வளவுதான் கடி வாங்கிய அதிகாரி பெரும் கூச்சல் போட்டார். அவர் போட்ட சத்தம் தபால் பணிமனை எங்கும் எதிரொலித்தன.

ருசிகரமான இந்தச் சம்பவத்தை தபால் நிலையத்தின் ஏனைய ஊழியர்கள் கூடி நின்று பார்த்து ரசித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக கொழும்பு தபால் திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (ஐ-17)

### பல்கலை. மருத்துவ மாணவர் எண்ணிக்கை

கொழும்பு. நவ. 8

வருடந்தோறும் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படும் மருத்துவ மாணவர்களின் எண்ணிக்கையை இம்முறை அதிகரிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுவதாகப் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் இந்திர கீர்த்தி சிரவீர அண்மையில் தெரிவித்துள்ளார். (க-6)


## தவறிவிட்டது

நேற்று மாலை 6 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கும், திருநெல்வேலிச் சிவன்கோயிலுக்கும் இடையில் பெறுமதிமிக்க புடைவைகள் கொண்ட உரப்பைப் பார்சல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கருணையுடன் தந்து உதவவும். சன்மானம் தரப்படும். தொடர்பு கொள்க;

க. சிவசம்பு 9, கைலாயபிள்ளையார் கோயில் மேற்கு வீதி, நல்லூர்.

(34097)


## ஓராண்டு வீர அஞ்சலி



தாயின் மடியில்: 22 — 02 — 1975

தாயக மண்ணில்: 16 — 12 — 1993

**13 · 11 · 1993** பூநகரி கூட்டுப் படை முகாம் தகர்ப்பின்போது விழுப்புண் அடைந்து வீரச்சாவடைந்த

**2ஆம் லெப். ஞானமூர்த்தி**
**இராமலிங்கம் அன்பழகன்**
(கண்ணன்)

''அன்னை மண் மீட்க, அண்ணன் அணி சேர்ந்து தடை பல கடந்து, படையணி தொடர்ந்து, களம் பல வென்றது உன் மன வைரம்.

''உன் பிறந்தமண்ணில் உதிர்ந்த நிலவே! எமையெல்லாம் தவிக்கவிட்டு பிரிந்து சென்றுவிட்டாய். ஓராண்டு ஓடிமறைந்தாலும் என்றும் உன் நினைவுகள் அழியாது''.

இன்று (08-12-1994) எமது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு ஆத்மசாந்தி நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

என்றும் உன் நினைவில் வாழும்:
தாய், சகோதரர்கள்,
மைத்துனர்கள், குடும்பத்தினர்.

32, சட்டநாதர் றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(34095)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 31 — 05 — 1927

மறைவு: 19 — 11 — 1993

திருமதி
**அன்னலட்சுமி இராஜபிள்ளை**
(இளைப்பாறிய ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி)

திதி: **08 · 12 · 1994**

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வட்டு. தென்மேற்கு.
வட்டுக்கோட்டை.

(34096)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றும் பாடசாலைகளின் புலமைப்பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ். மாவட்ட ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளில் பிரசுரமாகாத மற்றும் சில பாடசாலைகளின் முடிவுகள் வருமாறு:-

### கோப்பாய்க் கோட்டம்

★ அச்செழு சைவப்பிரகாச வி. — 01
★ அத்தியார் இந்துக் க. — 01
★ ஆவரங்கால் நடராச வி. — 01
★ இடைக்காடு ம. வி. — 05
★ இருபாலை சி. சி. ரி. எம். எஸ், — 01
★ காந்தல் ராமுப்பிள்ளை வி. — 06
★ கோப்பாய் ம. வி. — 01
★ நவக்கிரி அ. மி. த. க. — 01
★ நீர்வேலி சி. ரி. எம். எஸ். — 03
★ நீர்வேலி ஆர். சி. ரி. எம். எஸ். — 02
★ சரவணபவானந்த வி. — 03
★ நெறுப்பிட்டி இந்து தமிழ்க்கலவன் — 01
★ சோமஸ்கந்தக் கல்லூரி — 03
★ ஊரெழு கணேசா வி. — 01
★ உரும்பிராய் சந்திரோதய வி. — 03
(மற்றவை முன் வெளிவந்தன)

### ஊர்காவற்றுறை கோட்டம்

★ கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம. வி — 01
★ கலாநிதி தியாகராசா மத்திய ம. வி. — 01
★ சுருவில் றோ. க. த. க. பாடசாலை — 01
★ வலந்தலை தெற்கு அ. மி. த. க. பாடசாலை — 01
★ யாழ்ரன் கல்லூரி — 08

### வேலணைக் கோட்டம்

★ புங்குடுதீவு இறுப்பிட்டி அ. மி. த. க. பாடசாலை — 01
★ மண்டைதீவு ம. வி. — 01
★ வேலணை சைவப்பிரகாச வி. — 02
★ வேலணை சரஸ்வதி வி. — 01

### உடுவில் கோட்டம்

★ இணுவில் மத்திய கல்லூரி — 07
(மற்றவை முன் வெளியாகின)

### சங்கானைக் கோட்டம்

★ அராலி சரஸ்வதி — 01
★ சங்கானை சிவப்பிரகாச வி. — 04
★ சங்கானை அ. மி. த. க. பா. — 01
★ சுழிபுரம் ஐக்கிய சைவ வி. — 02
★ சுழிபுரம் கிழக்கு அ. மி. த. க. — 02
★ யாழ்ப்பாணக் கல்லூரி — 07
★ பண்ணாகம் மெய்கண்டான் வி. — 04
★ பொன்னாலை வரதராசப்பெருமாள் வி. — 01
★ தொல்புரம் விக்னேஸ்வரா வி. — 01
★ வட்டு. திருஞானசம்பந்தர் வி. — 02

### சண்டிலிப்பாய் கோட்டம்

★ ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலை — 01
★ இளவாலை கன்னியர் மடம் ம. வி. — 01
★ கட்டுடை சைவ வி. — 02
★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை — 02
★ மானிப்பாய் விவேகானந்தா — 05
★ மாதகல் சென் தோமஸ் — 03
★ நவாலி சென் பீற்றர்ஸ் — 01
★ பண்டத்தரிப்பு மகளிர் ம.வி. — 02
★ சண்டிலிப்பாய் இந்து ம. வி. — 06
★ சாந்தை சிற்றம்பலம் வி. — 01
★ சோதி வேம்படி வி. — 01
★ சென் ஆன்ஸ் றோ. க. த. பாடசாலை — 01
★ சுதுமலை சிந்மயபாரதி வி. — 07

### பருத்தித்துறைக் கோட்டம்

★ அல்வாய் வடக்கு றோ. க. — 03
★ கெருடாவில் இந்து த. க. பா. — 03
★ கொற்றாவத்த அ. மி. த. க. — 01
★ மேலைப் புலோலி சைவப்பிரகாச வி. — 04
★ பொலிகண்டி இந்து த. க. பா. — 01
★ புலோலி கிழக்கு அ. த. க. பா. — 02
★ புற்றளை ம. வி. — 09
★ பருத்தித்துறை சி. வி. வி. — 01
★ தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் த. க. பா. — 05
★ திக்கம் சித்திவினாயகர் பா. — 04
★ தும்பளை சைவப்பிரகாச ம. வி. — 18
★ துன்னாலை மேற்கு மெ. த. க. பா — 02
★ வட இந்து மகளிர் கல்லூரி — 08
★ வல்லை ம. ம. வி. — 02
★ வல்லை சிவகுரு வி. — 01
★ வல்லை எம். எம். ரி. எம். எஸ் — 01

### கரவெட்டி கோட்டம்

★ அல்வாய் சின்னத்தம்பி வி. — 01
★ ஞானாசாரியார் கல்லூரி — 04
★ இமையாணன் அ. த. க. பா. — 01
★ கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் த.க.பா. — 05
★ கம்பர்மலை அ.த.க பா. — 03
★ கரணவாய் ம. வி. — 01
★ கரணவாய் மணியரசர் தோட்டம் த. க. பா. — 01
★ கரணவாய் பொன்னம்பலம் வி. — 01
★ கரணவாய் தாமோதரம் வி. — 02
★ கரணவாய் வேதாணீஸ்வர வி. — 05
★ கரவெட்டி மாணிக்கவாசகர் வி. — 05
★ நெல்லியடி எம். எம். ரி. எம். எஸ். — 07
★ தேவரையாளி இந்துக்கல்லூரி — 01
★ துன்னாலை காசிநாதர் வி. — 03
★ துன்னாலை தெற்கு அ. த. க. பா. — 01
★ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி — 03
★ உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் — 02
★ வல்வெட்டி வினாயகர் — 01
★ வதிரி திரு. இருதயக் கல்லூரி — 01
★ வதிரி வடக்கு எம். எம். ரி. எம். எஸ். — 02
★ விக்கினேஸ்வராக் கல்லூரி — 09

### தென்மராட்சி கோட்டம்

★ சாவகச்சேரி அமிர்தாம்பிகை — 10
★ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை — 10
★ கல்வயல் சண்முகானந்தா — 07
★ மீசாலை வீரசிங்கம் ம. வி. — 05
★ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித். — 03
★ சாவகச்சேரி மகளிர் கல்லூரி — 02
★ நாவற்குழி ம. வி. — 02
★ கொடிகாமம் திருநாவுக்கரசு வித். — 02
★ அல்லாரை அ. த. க. பா. — 02
★ எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித். — 02
★ மட்டுவில் வடக்கு சந்திரமௌலீசா வித். — 02
★ சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி — 01
★ உசன் இராமநாதன் ம. வி. — 01
★ மட்டுவில் ம. வி. — 01
★ வரணி ம. வி. — 01
★ மறவன்புலோ சகலகலாவல்லி — 01
★ எழுதுமட்டுவாழ் அ. த. க. பா. — 01

(க-117-31)

# விடுதலையாகி பணம் இல்லாததால் மீண்டும் சிறையில் வாடும் ஈழத்தமிழர்!

## திருச்சி சிறையிலிருந்து திரும்பியவர் பேட்டி

வல்வெட்டித்துறை, டிச. 8

கடந்த ஒன்றரை ஆண்டுக்கு மேலாக பல அப்பாவி இலங்கைத் தமிழர்கள் திருச்சி மத்திய சிறைச்சாலையில் வாடுகின்றார்கள்.

புலிகளுக்கு உதவினார்கள் எனும் குறறச்சாட்டில் தமிழ் நாடு காவல்துறையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

மிகவும் மோசமானது என்னவென்றால் சிறையிலிருந்து விடுதலையாகினாலும் சொந்தச் செலவிலேயே தாயகம் திரும்பும்படி கூறுவதாகும். இதைச் செய்ய முடியாதவர்கள் தொடர்ந்தும் சிறையில் வாடுகின்றார்கள்.

திருச்சி சிறையில் இருந்து விடுதலையாகி தமது சொந்த செலவில் நாடு திரும்பிய இருவரில் ஒருவராகிய வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. ப. மாணிக்கவேல் (வயது 46) ''உதயனு'' க்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

### புலிகளுக்கு உதவியதாக குற்றச்சாட்டு

1992ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி நாகபட்டினத்தில் வைத்து மயிலிட்டி, முல்லைத்தீவு, வல்வெட்டித்துறை போன்ற இடங்களைச் சேர்ந்த பலர் தமிழ்நாட்டுக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளுக்கு பெற்றோல், மண்எண்ணெய் போன்ற பொருள்களைக் கடத்தினார்கள் என்பதே அவர்கள் மீதான குற்றச்சாட்டு.

ஐந்து நாட்களுக்குப் பின் நாம் திருச்சி மத்தியசாலையில் வைக்கப்பட்டோம். ஒரு மாதத்திற்கு பின்பு ஒரு தடவை திருச்சி நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது.

இது தவிர கடந்த ஒன்றரை ஆண்டுக்கு மேலான காலத்தில் எந்த விசாரணையும் நடைபெறவில்லை.

இந்த ஆண்டு ஜூன் மாதம் நாங்கள் விடுதலை செய்யப்பட்டோம்.

### மீண்டும் சிறையில் அடைத்து வைத்தனர்

ஆனால் எமது சொந்தச் செலவில் தாயகம் செல்ல வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டது

அவ்விதம் பணம் இல்லாதவர்கள் மீண்டும் சிறைச்சாலையிலேயே அடைத்து வைக்கப்பட்டனர்.

நானும் திரு. எஸ். செல்வேந்திரன் என்பவரும் உறவினர் அனுப்பிய பணத்தைக் கொடுத்து நாடு திரும்பினோம்.

ஏனையவர்கள் நிரபராதிகள் எனத் தீர்ப்பு வழங்கிய பின்னரும் தமிழ் நாட்டில் உள்ள அவர்களின் உறவினர்களின் வீடுகளிலோ நண்பர்களின் வீடுகளிலோ தங்க அனுமதிக்கப்படவில்லை.

—இவ்வாறு கூறினார் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. ப. மாணிக்கவேல்.

(க-155)

# அரச ஊழியரின் அடுத்த வருட சம்பள தினங்கள்

அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான அடுத்த ஆண்டுக்குரிய மாதாந்த சம்பளம் வழங்கும் திகதிகள் பற்றிய சுற்று நிருபம் ஒன்றை பொது நிர்வாக அமைச்சு, அமைச்சுகளின் செயலாளர்கள் மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அரச ஊழியர்களுக்கான சம்பளத் திகதிகள் வருமாறு;

ஜனவரி 25, பெப்ரவரி 23, மார்ச் 23, ஏப்ரல் 6, மே18, ஜூன் 22, ஜூலை 25, ஓகஸ்ட் 24, செப்ரெம்பர் 21, ஒக்ரோபர் 25, நவம்பர் 23, டிசம்பர் 21.

அரச பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பிரதி மாதமும் 20 ஆம் திகதி சம்பளம் வழங்கப்படும். குறித்த தினம் விடுமுறை நாளாக இருந்தால் அடுத்து வரும் வேலை நாளில் வழங்கப்படும். (எ)

# சீன சிமெந்து 230 ரூபாவாக விற்பனை

## தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள சிமெந்து ஒரு பக்கற் 230ரூபா வீதம் விற்பனை செய்யப்படுவதாக கட்டடப்பொருள் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் சிமெந்துத் தட்டுப்பாட்டை நீக்க சீனாவில் இருந்து 2 லட்சம் பக்கற் சிமெந்து இறக்குமதி செய்யப்பட்டது. இவற்றில் ஒன்றரை லட்சம் பக்கற் சிமெந்து விற்பனை செய்யப்பட்டு விட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. (ஐ-எ)

~~~~~
புலிகளின் குரல் வானொலியில்
~~~~~

08 — 12 — 1994

வியாழன் இரவு

★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — சித்த மருத்துவக் குறிப்புகள்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் 'கரைசேரும் படகுகள்' குறு நாடகம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — ஏட்டிலிருந்து அயர்லாந்து 800 ஆண்டு விடுதலைப் போர் என்ற நூலிலிருந்து 'இன்றைய நிலைமை'' எனும் கட்டுரையின் சில பகுதிகள்
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

09 —12 — 1994

வெள்ளி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்.
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
★ 7-40 — தாயகப் பாடல்கள்
★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

# சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த தொண்டர் ஆசிரியருக்கு நியமனம்

## விரைவில் வழங்கப்படும் என அறிவிப்பு

கொழும்பு, டிச.8

குறிப்பிடப்பட்ட சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவிருப்பதாகவும்— இதற்காக விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படவிருப்பதாகவும் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பதிரான தெரிவித்தார்.

மிலகிரியாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

பயிற்சி ஆசிரியர்களை நியமனம் செய்வதைத் தாம் நிறுத்தி விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் தகுதி வாய்ந்தவர்களுக்கு அத்திட்டத்தின்கீழ் ஆசிரிய நியமனம் வழங்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். (ஐ-எ)

# தன்னலமற்ற கடமை உணர்வுள்ள அலுவலர் சடாட்சரசண்முகதாஸ்

## அஞ்சலிக் கூட்டத்தில் இளங்குமரன்

வலிகாமம் தெற்கு, டிச. 8

இனப்பற்றுடன் கூடிய கடமை மிக்க ஊழியனாக பணியாற்றிய அமரர் சடாட்சர சண்முகதாஸ் தன்னலமற்ற கடமை உணர்வு கொண்ட ஓர் அலுவலர். வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் தேவைகள் பலவற்றுக்கு பல்வேறு மட்டங்களில் உதவியவர். பாடசாலைகளுக்கு வேண்டிய நிதிவளத்தை தம்மால் இயன்றளவில் தமிழ் பிரதேசத்துக்கு கிடைக்கச் செய்தவர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உள்துறை அமைச்சின் பிரதிச்செயலாளரும், வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மேலதிக செயலாளருமான அமரர் திரு. சி. சடாட்சர சண்முகதாஸ் நினைவஞ்சலிக் கூட்டத்தில் தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டினால் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடத்தப்பட்ட இக் கூட்டத்திற்கு கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தலைமை வகித்தார்.

திரு வெ. இளங்குமரன் மேலும் கூறியதாவது:- இராணுவ நடவடிக்கைகளால் சிரழிந்து, இடம்பெயர்ந்துள்ள பாடசாலைகள் படும் அவலங்களை நேரில் பார்த்து அவற்றுக்கு தனது உதவிகளை செய்ய வேண்டும் என விரும்பியவர்.

உயர்கல்வியில் சிங்கள மாணவர்களுக்கு இருக்கும் வாய்ப்பு வசதிகளை தமிழ் மாணவர்களும் பெறுவதற்கு கல்வி அமைச்சுக்கு அழுத்தம் கொடுத்தவர்.

தமக்காக மட்டுமன்றி தான் வாழும் சமுதாயத்துக்காகவும் வாழ்ந்தவர் அமரர் சடாட்சர சண்முகதாஸ். இப்படி அவர் கூறினார். கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தமது தலைமை உரையில் கஷ்டமான வேளைகளிலும் கூட உத்தியோகத்தர்களுக்கு எந்த ஒரு கஷ்டமும் கொடுக்கக்கூடாது என வாழ்ந்தவர். அவர் உயர்தர வகுப்பு மாணவர்கள் தொலைக்காட்சியில் விஞ்ஞானம் சம்பந்தமாக நடத்தப்படும் கல்வி நிகழ்ச்சிகளை படிப்பதற்கு தேவையான வீடியோ கசட்டுகளை பெற்றுத்தர கல்வி அமைச்சில் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தமிழ் பிரதேச பாடசாலை பிள்ளைகளுக்கு தேவையான மேசை, கதிரைகளை இங்கேயே செய்து கொள்வதற்கு உத்தரவு எடுத்துக்கொடுத்தவர்.

பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் திரு. சு. இரத்தினராசா, இ. சிவானந்தன், த. துரைசிங்கம், அதிபர் திரு.சி. செல்லையா, ஆசிரியர் திரு. ந. சிவசண்முகமூர்த்தி, உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணசாமி ஆகியோரும் இரங்கலுரை ஆற்றினார். (க-152)

# முன் வரிசையில் ஹேமா, சஜித்

கொழும்பு, டிச .8

கடந்த சனிக்கிழமை ஸ்ரீ கோதாவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற் குழுக் கூட்டத்தில் ஹேமா பிரேமதாஸாவும் சஜித் பிரேமதாஸாவும் கலந்து கொண்டனர்.

இவர்கள் இருவரும் முன் வரிசையில் அமர்ந்திருந்தனர்.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளாதவர்களில் அனுரா பண்டாரநாயக்கா, சுசில் முனசிங்கா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இவர்கள் இருவரும் வெளிநாடு சென்றிருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-எ)

## முக்கிய தேசியப் பிரச்சினைகளில்

# ஏனைய கட்சிகளுடன் ஐ. தே.க விவாதிக்கும்

கொழும்பு, டிச. 8

முக்கிய தேசியப் பிரச்சினைகள் தொடர்பாக ஏனைய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி புரிந்துணர்வு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபடவிருக்கிறது.

கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இந்த முயற்சியின் ஒரு கட்டமாக அனைத்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்த எம். பிக்கள் அங்கம் வகிக்கும் உபகுழு ஒன்றை தமது கட்சி அமைக்க எண்ணியிருப்பதாகவும் அவர் கூறினார்.

(இ-எ)

## கலந்துரையாடல்

வடமராட்சிக் கோட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கான மாதாந்தம் கலந்துரையாடல் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3- 00 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

எனவே வடமராட்சிக் கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.

(க)

## மாநகர சுத்திகரிப்பு ஊழியர்

யாழ்ப்பாணம், டிச. 8

மாநகராட்சியின் வட்டார பிரிவுகள் தோறும் சுத்திகரிப்பு ஊழியர்களை சுத்திகரிப்பு வேலையில் அமர்த்துவதற்கு மாநகராட்சி மன்றம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கென 54 சுத்திகரிப்புழியர்கள் அடுத்த வாரவில் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர். (க-17)

## திருகோணமலை உட்பட

# 17 பிரதான நகரங்களை அபிவிருத்தி செய்ய திட்டம்

கொழும்பு, டிச 6

திருகோணமலை உட்பட நாட்டில் உள்ள 17 பிரதான நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்தத் திட்ட வேலைகள் அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1998க்குள் பூர்த்தியாக்கப்படும்.

திட்டங்களுக்கான செலவினம் 180 கோடி ரூபாவாகும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 135 கோடி ரூபா பெற்றுக்கொள்ளலாம்.

காலி, குருநாகல், நுவரெலியா, இரத்தினபுரி, திருகோணமலை, அம்பலாங்கொடை, அனுராதபுரம், அம்பாந்தோட்டை, சிலாபம், வெலிகம, மொனறாகல, மாத்தறை, அளுத்கம, பொலன்னறுவ, பண்டாரவளை, கம்பளை, குளியாப்பிட்டி என்பனவே அபிவிருத்தி செய்யப்படவுள்ள நகரங்களாகும்.

(ஒ-க)

## விவசாய ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இன்று வியாழக்கிழமை கமத்தொழில்காப்புறுதிச்சபை யாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளன.

## சாவகச்சேரியில் மருந்து தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், டிச. 8

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அங்கு செல்லும் நோயாளர்கள் பலருக்கும் பென்சிலின் விட்டமின் குளிகைகளை வெளிக்கடைகளில் வங்கும்படி டாக்டர்கள் எழுதிக் கொடுப்பதால் இலவச சிகிச்சையை நம்பிச்செல்லும் மக்கள் பலரும் ஏமாற்றம அடைகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## ரணில் தலதா மாளிகை சென்று தரிசனம்

கொழும்பு, டிச 6

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கண்டியில் உள்ள ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம் செய்து புனித தந்தங்களை வழிபட்டார்.

பின்னர் அவர் மல்வத்தை மகாநாயக்க தேரர், அஸ்கிரிய மகாநாயக்க தேரர் ஆகியோரைத் தரிசித்து ஆசியைப் பெற்றுக் கொணடார்.

எதிர்க்கட்சித் தலைவர் தமது கட்சியைக் கட்டி எழுப்புவதில் உறுதியாகச் செயல்பட வேண்டும் என்று மல்வத்தை பீடாதிபதி தமது ஆசியுரையில் தெரிவித்தார்.

பௌத்த சாசன மேம்பாட்டுக்காக உழைக்கும்படி அஸ்கிரிய பீடாதிபதி தமது ஆசியுரையில் ரணிலைக் கேட்டுக்கொண்டார்.

# மாதா, குரு, தெய்வ வழிபாட்டில் மாணவர்கள்

சண்டிலிப்பாய், டிச.8

மானிப்பாயில் இயங்கி வரும் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் மாதா, குரு, தெய்வ வழிபாடு நிகழ்ச்சி கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை அன்று வித்தியாலய அதிபர் சைவப்புலவர் சு. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது.

ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் 82 மாணவ, மாணவிகள் இந்த நிகழ்ச்சியின் போது தங்கள் பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் விழுந்து வணங்கி அவர்களின் ஆசியை பெற்றனர். யாழ் வலயம் II பிரதி கல்விப் பணிப்பாளர் திரு. கோ. சி. வேலாயுதம், ஓய்வு பெற்ற சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோர் இவ் வைபவத்தில் முதன்மை விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

கடந்த நான்கு வருடங்களாக இந்த மகாவித்தியாலயத்தில் மாதா பிதா, குரு, தெய்வ வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (க-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

3, 4 அங்குல எஸ்-லோன் பைப்புகள், பொலித்தீன் தாள் சகல அளவுகளிலும் சொப்பிங் பாக் சகல அளவுகளிலும் அலுமினியம் தாச்சிகள், எனாமல் பெயின்ற் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. நாதன் களஞ்சியம், 213 C, மருத்துவமனை வீதி (கிட்டு சாலை), யாழ்ப்பாணம். [33981]

ஐஸ்கிறீம் தயாரிக்கும் இயந்திரமும் (3 H. P.) 17 H. P. லிஸ்டர் இயந்திரத்துடன் கூடிய 7½ K. V. மின் பிறப்பாக்கியும் விற்பனைக்குண்டு. (தற்போது இயங்கிக்கொண்டிருக்கின்றது) விவரங்களுக்கு: செந்தாமரை (றிக்கோ), 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-9884)

சோக்கேஸ், அலுமாரி பின்னல் செற்றி, அன்ரனா பைப், தட்டச்சு (யூனிவர்சல்), ஸ்ரீல் கபேட் மற்றும் வீட்டுத் தளபாடங்கள். குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில், பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. (34088)

## புத்தகங்கள் விற்பனை

அகராதிகள் கலைச் சொற்கள் (Glossary of Technical Terms) அரசியல், தத்துவம், உளவியல், விஞ்ஞானம், பகுத்தறிவு, தமிழிலும் ஆங்கிலத்திலும் கிடைக்குமிடம்: பிறைட்சேல்ஸ் சென்ரர், 21, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [மக்கள் வங்கி அருகில்] (34056)

## விசேஷ கழிவு

இலகு தோசை மா, இட்டலி மா, அப்பம் மா ஆகியவற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன்கூட்டியே ஒழுங்குசெய்து விசேஷ கழிவைப் பெற்றுக்கொள்ளுங்கள். தொடர்பு: சகல அண்ணா தொழிலக கிளைகளிலும். (சி-9597)

## அஷ்டலஷ்மி

அஷ்டலஷ்மி கலண்டர்கள் விற்பனையாகின்றன. அஷ்டலஷ்மி தினத்தாள் கலண்டர்கள் ரூபா 70/- பஞ்சாங்க கலண்டர் ரூபா 40/-. மேலதிகமான பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளாதீர்கள். பதிப்பாளர்: சிவா பிறிண்டேர்ஸ், கைதடி. (8054)

## விற்பனையாகிறது

சிவம் கலண்டர்கள் பொக்கற் கலண்டர்கள், வியாபாரத்திற்கு அடித்து கொடுப்பதற்குரிய சகல கலண்டர்களும், டயறிவகைகளும் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 165, மின்சார நிலையம் தலைமையகம்: மக்மிலன், யாழ்ப்பாணம். (சி-9929)

## மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் குறைந்த செலவில் திருத்திக்கொடுக்கப்படும். சகல மணிக்கூட்டு பற்றரிகளுமுண்டு. கஜன்ஸ் வோச் வேக்ஸ், 12, புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் (சந்திக்கருகில்). (7826)

## காணி விற்பனைக்கு

சூராவத்தை அம்மன் கோயிலடிக்கு மிக அருகில் காணி ஒன்று விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கோ தோட்டம் செய்வதற்கோ பயன்படுத்தலாம். தற்கால நிலைக்குத் தக்கவாறு விலை பேசித் தீர்மானித்து உடனே வாங்கலாம். விளம்பர இல. 730, மே/பா உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-9895)

## பெண் கட்டர் தேவை

ஆடை தயாரிப்பு நிலையம் ஒன்றுக்கு விதம் விதமாக மாதிரி உடைகள் வெட்டிக் கொடுப்பதிலும், மற்றும் உள்ளங்கி (பிறா) வெட்டித் தைப்பதிலும் பயிற்சி உள்ள பெண்கள் தேவை. 31-12-94 முன்பாக விண்ணப்பிக்கவும். இல. 728, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (சி-9883)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து தொழில்நுட்பவியலாளர் தரம் II பிரிவு 'பி' பதவிக்கான விண்ணப்பங்கள் 95-01-05 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

ரூபா 2,890—10x55—7x65 — 3,895/- மாதமொன்றுக்கு.

**தகைமைகள்:**

இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் 05 திறமைச் சித்திகளுடன் க. பொ. த. (சாதாரண தர) தேர்வில் ஆறு பாடங்களில் சித்தி திறமைச்சித்திகளுள் கணிதம், விஞ்ஞானம் என்பன அடங்கியிருத்தல் வேண்டும்.

**வயது:**

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

**தெரிவு:**

உளச் சார்பறித்தேர்வினை மூலமும் நேர்முகப் பரீட்சையின் மூலமும்

**குறிப்பு:**

தொழில் நுட்பவியலாளர் சேவையின் 'பி' பிரிவின் கீழான நியமனம் பெறுபவர் முதலில் ஒரு மாதத்திற்கு 2,890/- மாதாந்த நிலையான சம்பளத்தில் மூன்றாண்டுகளுக்கு ''பயிலுனர் தொழில் நுட்பவியலாள''ராக நியமனம் பெறுவர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக் கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23x10 ச மீ அளவுடைய சயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் விவரங்கள் தெளிவின்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு:**

விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும் கொழும்பு 13, ஆட்டுப்பட்டித் தெரு, 154ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-12-05. (சி-9893)

## நத்தார் பெருநாள் ...

மில்க்வைற் சலவைத்தூள் பாவனையாளர்களுக்கு ... டிப்பு இனிய செய்தி 450 கிராம் பக்கற் சலவைத்தூள் விலை ரூபா 45/- ... குறைப்பு 450 கிராம் பெற்றுப்பக்கற் ஒன்றுக்கு இருப்புள்ளவரை வழிபாட்டுக்குரிய கிறிஸ்தவ வண்ணப்படம் அன்பளிப்பு. 'மில்க்வைற்' (சி-9896)

## தேக்கம் கன்று எடுத்துவர நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிச. 8

அனுராதபுரத்தில் இருந்து 50. ஆயிரம் தேக்கம் மரக்கன்றுகளை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு யாழ். வனபரிபாலன திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தேக்கம் கன்றுகளை எடுத்து வருவதற்காக யாழ். வனபரிபாலன பகுதி உத்தியோகத்தர் ஒருவர் அனுராதபுரம் சென்றுள்ளார். (ஐ-17)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் 1994 ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 12ஆம் திகதி (12 - 12 - 1994) திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில்,

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**அன்றூ ஞானேஸ்வரன்**
(பிரான்ஸ்)
அவர்களுக்கும்

எமது ஏக புத்திரி
திருநிறை செல்வி
**லெற்றி சியாராணி**
**(மைனா)**
(கலைப்பீட மாணவி
யாழ். பல்கலைக்கழகம்)
அவர்களுக்கும்

திருமணச் சடங்கு நடைபெறும் அவ்வமயம் உற்றார், உறவினர், அயலவர் அனைவரும் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதித்து ஏகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ 14 - 12 - 1994 புதன்கிழமை மாலை 3 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்;

வைத்திய கலாநிதி
திரு. திருமதி ஜி. ஜோர்ஜ் ஜே.பி.,
''புவனவாசம்''
சுன்னாகம்.

திரு. திருமதி
வெலிச்சோர் ஆபரணம்,
சங். சகோ. ஜெறோம் (அ.ம.தி.)
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(இரு வீட்டார் அழைப்பு)

## காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

காரைநகர்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

### முக்கிய அறிவித்தல்
### வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தினது 17 - 11 - 94 வியாழக்கிழமை நடைபெற இருந்து பிற்போடப்பட்ட வருடாந்தப் பொதுக்கூட்டம் 23-12-94 வெள்ளிக்கிழமை மு. ப. 9-00 மணிக்கு வட்டுக்கோட்டை மாவடியில் உள்ள காரைநகர் யாழ்ரன் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. சோ. விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன். மேற்படி கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் பொதுச்சபை பிரதிநிதிகளால் தரப்பட்ட முகவரிக்கு கடித மூலம் அனுப்பப்படும். கடித மூலம் கிடைக்கப் பெறாதவர்கள் 374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

07-12-94.

க. நடராசா,
செயலாளர்

(சி-9897)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 07 — 1984

மறைவு: 19 — 12 — 1993

### செல்வி கோ. கஸ்தூரி

திதி: 08 - 12 - 1994


எம் அன்புத் தெய்வமே!
பத்துமாதம் சுமந்து பெற்று
பத்தாண்டை அடையுமுன்னே
பாரைவிட்டு எங்கு சென்றீர்
பாசமகளே... எம் கஸ்தூரி மானே...

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன்பிரிவால் வாடும்:
அன்பு அப்பா, அம்மா,
அக்காமார், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்;
கோவிந்தராஜ்
தொண்டைமனாறு,
கெருடாவில். (34075)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

### பிரம்மஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள் பரமேஸ்வரசர்மா (ராதா)

தோற்றம்: 20 — 08 — 1946

மறைவு: 19 — 11 — 1993

திதி: 8 — 12 — 1994
(கார்த்திகை வளர்பிறை ஷஷ்டி)

வாழ்வெனும் நீண்டதொரு பாதையினிற் செலுமெமக்குத் துணையே யாகி
தாழ்வினிலும் ஆறுதல்கள் பலசொல்லிச் சஞ்சலங்கள் தம்மை நீக்கி
நாள்முழுதும் கருத்தொன்றி எம்முடனே வாழ்ந்திட்ட நல்லோய் இன்று
ஊழ்வினையால் பிரிந்தவுன் ஆன்ம சாந்தி வேண்டியே யாம் அஞ்சலி செய்கின்றோமே.

மனைவி, மக்கள்,
உறவினர்கள்.

197/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (34077)

## பிரதேச செயலர்களே இனி உள்ளூராட்சி உ. ஆணையர்

யாழ்ப்பாணம், டிச. 8

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பதவி மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான அறிவித்தல் 28 - 10 - 94ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலாளர்களின் பெயர்களும் அந்த வர்த்தமானி அறிவித்தலில் இடம் பெற்றுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள 13 பிரதேச செயலாளர்களுக்கும் வடக்கு- கிழக்கு மாகாண சபையால் இது தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

கொழும்புத்துறை, டிச. 6

குடாநாட்டில் மரக்கறிகளின் விலைகள் மிகவும் அதிகரித்துள்ளன.

யாழ். சந்தை, திருநெல்வேலி, சுன்னாகம், சுழிபுரம், சங்கானை, சாவகச்சேரி போன்ற சந்தைகளில் கடந்த சில தினங்களாக பாகற்காய், கத்தரிக்காய், கரட், பயிற்றங்காய், பூசணிக்காய் போன்ற பல்வேறு மரக்கறிகளினதும் விலைகள் அதிகரித்து காணப்படுகின்றன.

கோழி முட்டையின் விலையும் குடாநாட்டில் என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது. ஒரு முட்டை 8ரூா 30 சதம் முதல் 9 ரூபா வரை விற்கப்படுகிறது. (ஒ-30-154)

## 72 துப்பாக்கிகள் மாயமாகின

கொழும்பு, டிச. 8

கொழும்பு ஊர்காவல் படைத் தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்ட 150 துப்பாக்கிகளில் 72 காணாமற் போய்விட்டன என்று அறிவிக்கப்படுகிறது.

1988 இல் தென்பகுதியில் தீவிரவாத வன்செயல்கள் உச்சக்கட்டத்தில் இருந்த போது திவுலப்பிட்டி பொலீஸ் பகுதியில் உள்ள முன்னணி அரசியல்வாதிகளின் பாதுகாப்புக்காக கடந்த அரசினால் இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. (அ-4)

## திருவெம்பாவை

சுழிபுரம், டிச.8

இவ்வாண்டு திருவெம்பாவை கார்த்திகை மாதத்திலேயே ஆரம்பமாகவுள்ளது. திருவெம்பாவை 10 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி 19 ஆம் திகதி திங்கட்கிழமை முடிவடையும். (க-28)

## டீசல் கடத்தும் முயற்சி முறியடிப்பு

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த ஞாயிறு இரவு நடைபெற்ற டீசல் கடத்தல் முயற்சி பாதுகாப்பு உத்தியோகத்தரால் முறியடிக்கப்பட்டது.

பிடிபட்ட சுமார் 12 லீட்டர் டீசல் வைத்தியசாலை பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதுதொடர்பாக சந்தேகத்தின் பேரில் தற்காலிக சிற்றூழியர் ஒருவர் வேலையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். (இ-15)

## வீதிகளில் குப்பை

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ். மாநகராட்சி மன்றப் பகுதியில் வீதிகளில் கூட்டி துப்புரவாக்கப்படும் குப்பை மற்றும் கழிவுப் பொருள்கள் அகற்றப்படாமல் கிடக்கின்றன.

வாகன வசதியின்மையே இதற்குக் காரணம் என்று மாநகர சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-177)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

### ஆண்டு 6, 7, 8

புதிய பிரிவுகள்
**10—12—1994** சனிக்கிழமை 2 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| கணிதம் | — திரு. இராஜேந்திரன் |
| விஞ்ஞானம் / சுகாதாரம் | — திரு. டார்வின் |
| தமிழ் | — செல்வி தேவகி |
| ஆங்கிலம் | — திரு. விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி | — திரு. ராஜன் |
| சமயம் | — திரு. சங்கர் |

கடமை, கட்டுப்பாடுடன் நடத்தும் ஒரே நிறுவனம் (சி-9892)

## குழந்தை யேசுவிற்கு நன்றி

''என்னை நீ அதிகமதிகமாக மகிமைப்படுத்தும் போதெல்லாம் உனக்கு நான் அதிகமதிகமாக ஆசிரை அருளுவேன்''

என திருவாய் மலர்ந்தருளிய தெய்வீகக் குழந்தை யேசுவே ஒன்றரை மாதங்களாக நெருப்புக் காய்ச்சல் காரணமாக வைத்திய சாலையில் பிழைக்க முடியாத நிலையிலிருந்தபோது உம்மை நோக்கி தளராத விசுவாசத்தோடு வேண்டிக் கொண்ட எங்களின் வேண்டுதலுக்கு கனிவாய் செவி சாய்த்து உமது குணமாக்கும் கரத்தால் இந்நோயிலிருந்து பூரண சுகம் தந்தமைக்காக உள்ளம் நிறைந்த நன்றியுடன் இதைப் பிரசுரிக்கிறேன்.

- குழந்தை யேசுவின் அடியான்.

[8062]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் கா. கிருஷ்ணர்

தோற்றம்: 22 - 04—1919

மறைவு: 08—11—1994

எமது பாடசாலை அதிபர்
திரு. கி. சிவப்பிரகாசம் அவர்களின் தந்தையார்
அமரர் கா. கிருஷ்ணர்
அவர்களின் நினைவையொட்டி அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உப அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அ. சபை,
பழைய மாணவர் சங்கம்.
யா/குட்டியப்புலம் அ. த. க. வித்தியாலயம். (34091)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## போக்குவரத்து பாதை

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குப் போக்குவரத்துப் பாதை ஒன்று திறக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஐக்கிய தேசியக் கட்சி பதவியில் இருந்த காலத்திலேயே வலியுறுத்தப்பட்ட ஒன்று. தமிழர் தரப்பிலிருந்து மட்டுமன்றி யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்ற தென்னிலங்கைப் பிரமுகர்கள் பலரும் போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறக்க வேண்டிய அவசியத்தை பல சந்தர்ப்பங்களிலும் இடித்து உரைத்தனர்.

இளாலிக் கடற் பயணம் எவ்வளவு சிரமங்களும், கஷ்டங்களும், ஆபத்துகளும் நிறைந்தது என்பது அனுபவ ரீதியாக உணர்ந்தவர்களுக்குத் தான் தெரியும்.

ஆனால் யாழ்.மாவட்ட மக்களின் போக்குவரத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கும் மனித உரிமை மீறலை புதிய அரசும் இன்னும் உணர்ந்ததாக இல்லை.

பழைய அரசாங்கம் தெற்கில் இழைத்த மனித உரிமை மீறல்களை, அண்மையில் கொழும்பில் நடைபெற்ற நீதிபதிகள் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா பட்டியல் போட்டுக் காட்டி உள்ளார். வடக்கு-கிழக்கில் ஐ. தே. க. அரசு நடத்திய மிகக் கொடுமையான மனித உரிமை மீறல்களை மிக வசதியாக அவர் மறந்துவிட்டார்!

மனித வாழ்வியக்கத்திற்கு மிக அவசியமான போக்குவரத்து உரிமை, குடாநாட்டு மக்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. பொருளாதாரத் தடையை ஓரளவேனும் தளர்த்தியது போல, மனித உரிமைகளைப் பேணுவதில் பெரு விருப்பம் கொண்ட புதிய ஜனாதிபதி, குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்காதது மிகவும் விசனத்துக்கு உரியதாகும்.

இந்த விடயத்தில் சந்திரிகா எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாமல் முட்டுக்கட்டையாக இருப்பது பாதுகாப்புப் படையினர் என்பது மிக வெளிப்படையான ஒன்று.

தமக்கு ஏற்படக் கூடிய இராணுவ ரீதியான பாதிப்புகளைக் காரணம் காட்டிப் படையினர் பூநகரி-சங்குப்பிட்டிப் பாதையை திறப்பதற்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள். ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கு, அதனூடாக மக்கள் அச்சமின்றி, தொந்தரவின்றி, நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் பயணம் செய்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்க மறுக்கிறார்கள்.

இத்தகைய நிலையில்தான், பாப்பரசரின் வருகையை முன்னிட்டாவது பூநகரிப் பாதையை திறப்பதற்கான ஆக்கபூர்வமான (Positive) முழுமனதான ஒழுங்கு எதனையும் அரச தரப்பினர் நேற்று நண்பகல் வரை மேற்கொள்ளவில்லை. இராணுவம் இது விடயத்தில் அரைகுறை மனதுடன் இருப்பதால், பாவம் சந்திரிகாவினால் எதுவும் செய்யமுடியவில்லை!

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது, தமிழர்களின் நலன்களைப் பேணுவது என்ற சந்திரிகாவின் நோக்கம் குறித்து இச்சந்தர்ப்பத்தில் பெரிய சந்தேகக் குறி எழுவது இயல்பே.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தான்; இராணுவ வழியை நாடுவதில்லை என்ற திடசங்கற்பமான முடிவுடன் சந்திரிகா செயற்பட்டால், போக்குவரத்துப் பாதையைத் திறப்பதால் இராணுவ நலன் பாதிக்கப்பட்டுவிடுமே என்று தயக்கம் காட்ட வேண்டிய தேவை இருக்காது.

இராணுவம் எந்த வகையிலும் பலவீனம் அடைவதை இராணுவ உயர் அதிகாரிகள் விரும்பாதது போலவே, முப்படைகளின் தளகர்த்தரான ஜனாதிபதி சந்திரிகாவும் விரும்பவில்லை என்பது வெளிப்படையாகிறது.

இந்த நிலைப்பாடு, உண்மையான சமாதானத் தேடலுக்கு உகந்ததா? அரசியல் தீர்வைக் காண்பதற்கு உதவுமா, ஊக்கமளிக்குமா? சந்திரிகா எங்கே நிற்கிறார்? என்பன போன்ற கேள்விகளையும் தோற்று -நிற்கவைக்கிறது!

### நிரந்தர யுத்த நிறுத்தம் செய்து

# சமாதானப் பேச்சினை தொடருமாறு

# கனேடிய எம்.பி அரசிடம் கோரிக்கை

கொழும்பு, டிச. 8

நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு, யாழ். குடாநாட்டின் மீதான பொருளாதார முற்றுகையை நிரந்தரமாக நீக்கி சமாதானப் பேச்சுகளைத் தொடரும்படி ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசுக்கு இலங்கையின் சமாதானத்துக்கான கனேடிய நிவாரண அமைப்பு ஒன்று கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த அமைப்பின் பாதுகாவலராகிய கனடாவின் ரொரொன்டோ மாகாண எம். பி. திரு. ரோனி ருப்ரெக்ற் வெளியிட்ட அறிக்கையில் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் அண்மையில் அறிவித்த ஒரு வார கால யுத்தநிறுத்த அறிவிப்புடன் அமைதித் தீர்வை நோக்கிய பாதை தெரிவதாக கனடாவில் உள்ள தமிழ்ச் சமூகத்தின் தலைவர்கள் கருதுகின்றனர். பேச்சு மூலம் தீர்வு, சமாதானம் காண உங்கள் அரசும் பதிலுக்கு யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவித்து, யாழ். குடாநாடு மீதான பொருளாதாரத் தடையை முற்றாக நீக்க வேண்டும் என்று கோருகின்றோம்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-எ)

# அமைச்சுக்களுக்கு ஆலோசகர்களாக 54 எம். பிக்கள் நியமிக்கப்பட்டனர்

## ஒவ்வொருவருக்கும் தனி வாகனம்

22 அமைச்சுகளுக்கும் மொத்தம் 54 எம். பிக்களை ஆலோசகர்கள் என்ற அடிப்படையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு நியமித்துள்ளதாக 'த ஐலண்ட்' நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

15 அமைச்சுகளுக்கு தலா 3 எம். பிக்கள் வீதமும், 7 அமைச்சுகளுக்கு தலா 2 எம். பிக்கள் வீதமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாகவே இவர்கள் நியமனஞ் செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தேவை ஏற்படும் போது சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு ஆலோசனைகளை வழங்க இவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

இந்த எம். பிக்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இவ் வாகனங்களை திட்ட அமுலாக்கல் அமைச்சு பராமரித்து வருகின்றது. இதனை விட இவர்களுக்கு வேறு மேலதிக அலவன்ஸ்கள் வழங்கப்படுவது இல்லை.

இதே வேளை — ஜனாதிபதித் தேர்தலுக்கு எம். பிக்களின் பூரண ஆதரவைப் பெற்றுக் கொள்ளுமுமாகவே இந் நியமனங்கள் வழங்கப்பட்டன என்றும் —

அதனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்களைத் திரும்பப் பெறும் முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் வேறு சில வட்டாரங்கள் தெரிவித்தன.

[ஐ-எ]

## அமைச்சின் ஆலோசகராக தமிழர்

கொழும்பு, டிச. 8

கால்நடை அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சின் ஆலோசகராக டாக்டர் கந்தையா கணேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது அமைச்சரவை நியமனமாகும். (ஐ-எ)

## லஞ்ச ஊழல் நிரந்தர ஆணைக்குழு

கொழும்பு, டிச. 8

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் செயற்படவுள்ள லஞ்ச ஊழல் நிரந்தர ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக திருமதி. நெலும்கமகே நியமிக்கப்படவிருப்பதாக தெரிய வந்துள்ளது.

(ஐ-3-6)

# கொழும்பில் வாகனக் கடத்தல்; கடற்படையினர் உஷார் நிலை!

கொழும்பு, டிச. 8

கொழும்பில் கடற்படைத் தலைமையகம் அமைந்துள்ள பாதுகாப்பு வலயத்தினுள் பிரவேசிக்க அனுமதி பெற்றிருந்த மோட்டார் வாகனம் ஒன்று ஆயுதக்குழு ஒன்றினால் கடந்த வாரம் கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அதனை அடுத்து கடற்படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையின் பாதுகாப்பு வலயத்தினுள் பவர் அன்ட் கம்பெனியின் தலைமை அலுவலகம் உள்ளது.

அந்த கம்பெனிக்குச் சொந்தமான ஒரு வாகனமே கடந்த வியாழக்கிழமை கொள்ளுப்பிட்டியில் வைத்து மாலை 7-30 மணியளவில் துப்பாக்கி முனையில் மூன்று இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கடத்தலில் சம்பந்தப்பட்டவர்கள் தமிழரா அல்லது சிங்களவரா என்பதை சொல்லமுடியாத நிலையில் பொலீஸாரும் கடற்படையினரும் உள்ளனர் என்று 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

இவ் வாகனத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சி எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ் வாகனம் பாதுகாப்பு வலயத்தினுள் பிரவேசிக்க அனுமதி பெற்றுள்ளது. பவர் அன் கம்பெனியின் தலைவர் இந்த வாகனத்தைப் பயன்படுத்தி வந்தார். (இ-எ)

## மரப்பாதுகாப்பு கூடுகள் களவு

வீதியோர மரங்களின் பாதுகாப்புக்கென அமைக்கப்பட்ட கூடுகள் சில விசமிகளால் தொடர்ந்தும் களவாடப்பட்டு வருகின்றன.

கடந்த 13ஆம் திகதி இரவு கொடிகாமம் நாவலடி பாடசாலைக்கு அருகாமையில் 10 பாதுகாப்புக் கூடுகளும், எழுதுமட்டுவாள் பகுதியில் 8 கூடுகளும், இத்தாவில் பகுதியில் 5 கூடுகளுமாக மொத்தம் 23 கூடுகள் களவாடப்பட்டுள்ளன.

பொதுமக்கள் விழிப்புடன் இருந்து எமது தேசத்தின் சூழலைப் பாதுகாப்பதற்காக விசமிகளின் அடாவடித்தனங்களைக் கண்டுபிடித்து ஒத்துழைப்பு நல்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொள்கின்றது. (க)

# தெற்கு தலைமையை அழித்துவிட்டு பிரபாகரன் மன்னனாகிவிட முடியாது!

## பிரதமர் ஸ்ரீமாவோ கூறுகிறார்

தென்பகுதி அரசியல் தலைமையை அழித்து விட்டு இந்த நாட்டின் மன்னனாக தாம் வரவேண்டும் என்று பிரபாகரன் நினைத்தால் ஒரு தவறையே அவர் செய்கிறார்.

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா, "பழைய நினைவுகள்" என்ற பொருளில், கொழும்பு "இளைய பிரிட்ஜ்மென்" கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடபகுதியில் நடைபெறும் யுத்தத்துக்கு நாம் ஒரு முடிவு காண வேண்டும்.

பிரபாகரனின் சொந்த மக்கள் கூட சமாதான முயற்சிகளுக்கு அவர் இணங்க வேண்டும் என்று வலியுறுத்தினால் அவர் அதற்கு இணங்கவே வேண்டி இருக்கும்.

நான் பிரதமர் பதவியை பலவந்தமாகப் பெற்றுக் கொள்ளவோ அதனைக் கைப்பற்றவோ இல்லை.

நான் அமைச்சரவையினாலேயே அப்பதவிக்கு நியமிக்கப்பட்டேன். நான் மரணம் அடையும் வரை மக்களுக்குச் சேவை செய்வேன்.

இப்படி ஸ்ரீமாவோ கூறினார்.

1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் படுதோல்வி அடைந்தோம். கடந்த காலத்தில் நாம் செய்த தவறுகளே அதற்குக் காரணம் என்பதை நாம் இப்போது உணர்ந்து கொண்டோம். இந்தத் தவறுகளை மீண்டும் செய்யாமல் இருக்க வேண்டும் என்பதில் நாம் மிகுந்த கவனம் செலுத்துவோம் என்றும் ஸ்ரீமாவோ கூறினார். (இ)

## புதிய ஆலயம்

பதுளை டிச 8

பதுளை மறை மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புனித யூதாததேயு ஆலயம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் ஆலயத்தின் நவநாள் ஆராதனையும் நற்கருணை திருபவனியும் திருமலை மட்டுநகர் ஆயர் பேரருள் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில் நடைபெற் (க-17)

# காட்டுக்குள் நாலரைமாத சிறைவாழ்வு

# ஆனாலும் நன்றாக உபசரித்தனர்

## புலிகளிடம் சிக்கி விடுதலையான புத்தளம் வாசி தகவல்

தலைமன்னார், டிச. 8

"முஸ்லிம் மக்களுக்கும் எமக்கும் எந்த வித பகைமையும் கிடையாது. இதனை நீர் சென்று முஸ்லிம் மக்களுக்குக் கூறுங்கள்"—

புலிகள் மேற்கண்டவாறு கூறியதாக நான்கரை மாதங்களாக விடுதலைப் புலிகளின் பிடிக்குள் இருந்து சமீபத்தில் விடுதலை செய்யப்பட்ட புத்தளம் இலவன் குளத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு ஜூலை மாதம் 10ஆம் திகதி வில்பத்து காட்டுப் பிரதேசத்துக்கு அருகில் உள்ள காலாவி ஆற்றுக்குச் சென்ற சமயம் இந்த நான்கு முஸ்லிம்களும் புலிகளினால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாங்கள் விடுதலைப் புலிகளிடம் சிக்கியது பற்றி அவர்கள் தெரிவித்ததாவது:-

சம்பவ தினம் நாங்கள் நான்கு பேரும் வேட்டையாடுவதற்காக ஒரு துவக்குடன் காலை 6-00 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டு 8-00 மணி அளவில் காலாவி ஆற்றுப்பகுதியை அடைந்தோம்.

அங்குள்ள ஒரு ஆற்றைக் கடந்த போது அக் காட்டுக்குள் இருந்து 'கான்ஸ் அப்' என்ற ஒரு குரல் கேட்டது.

நாங்கள் திடுக்கிட்டு கைகளை உயர்த்தினோம். அப்போது ராணுவ சீருடையில் வந்தவர்கள் எங்களிடமிருந்து துவக்கைப் பறித்தார்கள். இவர்களை ராணுவத்தினர் என்று தான் முதலில் நினைத்தோம். ஆனால் இவர்கள் தமிழில் பேசியதால் விடுதலைப் புலிகள் என்று உணர்ந்து கொண்டோம்.

நாங்கள் பயத்தால் நடுங்கிய போது 'உங்களை நாங்கள் துன்புறுத்த மாட்டோம்' என்று அவர்கள் ஆறுதல் கூறினர்.

அவர்கள் எங்களை அழைத்து பத்து மைல் தூரம் நடத்திக் கூட்டிக் கொண்டு போனார்கள். காட்டுக்குள் உள்ள ஒரு பங்களாவை நாம் சென்றடைந்தோம்.

அங்கு எங்களுக்கு நாடில்ஸ் மற்றும் தேநீர் தந்து உபசரித்தனர். பின்பு எங்கள் நான்கு பேரினதும் கண்களைக் கட்டி மற்றும் ஒரு இடத்துக்கு கூட்டிச் சென்றனர்.

சுமார் ஐந்து மைல் தூரம் சென்ற பின் அவர்களின் பொறுப்பாளர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டோம்.

நாங்கள் ஊர்காவற்படையினர் என்று தெரிந்தும் அவர்கள் எங்களுக்கு எந்த வித தொந்தரவும் செய்யவில்லை.

பின்னர் மீண்டும் எங்கள் கண்களைக் கட்டி உழவு இயந்திரம் ஒன்றில் ஏற்றி இரவு 9-00 மணி அளவில் வேறு ஒரு வீட்டில் சேர்த்தார்கள்.

அங்கு ஒரு அறையில் [illegible] வைத்துக் காவல் புரிந்தனர். ஒரு வாரத்தின் பின் எங்களது கால் சங்கிலி விலங்கும் அகற்றப்பட்டது.

அறையில் நல்ல உணவு தந்தார்கள். வாசிப்பதற்கு பத்திரிகைகள், கதைப்புத்தகங்கள் தந்தார்கள், நுளம்புத் திரியும் தரப்பட்டது.

நாங்கள் முஸ்லிம்கள் ஆதனால் எங்களை விடுதலை செய்ய மாட்டார்கள் என்றே நினைத்தோம். ஆனால் திடீர் என ஒரு நாள் "நீங்கள் நாளைக்கு விடுதலையாகப் போகிறீர்கள்" என்று தெரிவித்தனர்.

அடுத்த நாள் ஆளுக்கு 500 ரூபாவும் உடுப்புகளும் தந்து கண்களைக் கட்டி பிக்கப்பில் ஏற்றிக் கொண்டு போய் விடத்தல் பிரிவு உதவி அரசாங்க அதிபர் முன் ஒப்படைத்தனர்.

பின்னர் நாம் மன்னார் [illegible]திபரிடம் ஒப்படைக்கப்பட்டோம்.

[illegible] அவர்கள் தெரிவித்தனர். (இ)

### பாப்பரசருக்கு அளிக்கப்படவுள்ள

# அரச மரியாதைக்கு பிக்குகள் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், டிச. 8

அடுத்த மாதம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ள பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கு அரச மரியாதை அளிக்கப்படுவதை தெற்கில் உள்ள பௌத்த பிக்குகளில் ஒரு சாரார் எதிர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனவரி 20 ஆம் திகதி மாலை கொழும்பை வந்தடையவுள்ள பாப்பரசருக்கு அரச மரியாதையுடன் கூடிய வரவேற்பு நிகழ்ச்சியை நடத்த அரசு விசேட ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இந்நிலையில் —

பௌத்த பிக்குகளில் ஒரு சாரார் அரசின் இந்த நடவடிக்கைகளை குறைகூறி எதிர்த்து வருவதாக கொழும்பைச் சேர்ந்த கிறிஸ்தவ மதகுரு ஒருவர் தெரிவித்தார்.

பிறமதத் தலைவர் ஒருவருக்கு பௌத்த நாடான இலங்கையில் அரச மரியாதை அளிக்கப்படுவதை பௌத்த பிக்குகள் விரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-3)

# நீண்டகால ஆட்சி ஊழலுக்கு வழிகோலும்!

## ஒப்புக்கொள்கிறார் ரணில்

கொழும்பு, டிச 8

ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்துள்ளது: ஆனால் சாகவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கண்டி மாவட்ட ஐ. தே. க. கட்சி அமைப்பாளர்கள் மத்தியில் பேசியபோது முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

"நாம் ஊழல் நடவடிக்கைகளை எதிர்க்கின்றோம். நீண்ட காலத்துக்கு ஒரு கட்சி ஆட்சியில் நீடித்தால் தவறுகள் புரிவது இயற்கைதான். பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில்உள்ளவர்கள்எல்லோரும்முற்றும் துறந்தஞானிகளா"?

இப்படி ரணில் கேட்டார்.

[ஐ-எ]

# குடைபிடித்து பரீட்சை எழுதிய மாணவர்கள்

கொழும்பு, டிச. 8

அம்பாறை மாவட்டத்தில் கடும் மழை காற்றின் மத்தியிலேயே கடந்த திங்கட்கிழமை ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைகள் ஆரம்பமாகின.

பரீட்சை மண்டபங்கள் பல ஒழுக ஆரம்பித்ததால் பரீட்சார்த்திகள் சிலர் குடையைப் பிடித்துக் கொண்டே பரீட்சை எழுதினராம்.

கல்முனையில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் மேல் மாடியில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் பெரும்பாலும் முழு மாணவர்களுமே குடையைப் பிடித்துக் கொண்டு பரீட்சை எழுதினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

"ஒரு வருடம் கஷ்டப்பட்டுப் படித்த எங்களை இந்த மழை ஒழுக்கு என்ன செய்துவிட முடியும்?" என்று கூறிக் கொண்டு பரீட்சார்த்திகள் குடையுடன் தமிழ் மொழிப் பரீட்சை வினாக்களுக்கு விடை எழுதினர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ)

# எண்ணியவை நிறைவேற விநாயக ஷஷ்டி விரதம்

விநாயகப் பெருமான் அவதாரம் செய்த நட்சத்திரம் சதயம். சதயம் மருவிய ஷஷ்டித் திதி வரும் நாளில் அவரைத் தரிசித்து வழிபடுபவர் துன்பங்களில் இருந்து விடுதலை பெறுவதுடன், எல்லா நலன்களையும் எய்துவர் என்பதை விளக்கும் ஒரு சம்பவத்தைக் கந்தபுராணம் பேசுகிறது. இன்று அந்தப் புனிததினமாகும்.

முன்னர் ஒருநாள் ஸ்ரீநாராயணமூர்த்தி சிவபிரானைத் தரிசிக்க விரும்பிக் கயிலையங்கிரிக்குச் சென்றார். அந்தச் சமயம் திருவிளையாடல் ஒன்றை மனதிற்கொண்ட சிவபிரான், சக்கரபாணியை நடுவராகச் சாட்சி சொல்லுமாறு கூறி, உமையம்மையுடன் சூதாடத் தொடங்கினார். ஆட்டங்களில் உமையம்மை வென்றிபெற, சிவபிரான் தானே வென்றதாகக் கூறினார். இறைவனுடன் வாதம் புரிய அஞ்சிய அம்பிகை, அருகில் நடுவராக இருந்த நாராயணமூர்த்தியைப் பார்த்தார். பார்வையின் நோக்கத்தை உணர்ந்த திருமால் "சிவபிரானே வெற்றி பெற்றார்" என்று (வஞ்சகமாக) பொய் கூறினார்.

கோபமடைந்த அம்பிகை, "மாயவனே உன் மேனி கருமை என்பார்கள். இப்பொழுது உனது மனமும் கருமையாகிவிட்டதுபோலும். பக்கத்தில பார்த்திருந்தும் படுபொய் பேசிய நீ பாம்பாகக் கடவாய்" என்று சாபமிட்டார்.

அம்பிகையின் சாபம் காரணமாகக் கொடிய,நெடிய பாம்பின் உருவம் நாராயணமூர்த்தியை வந்து அடைந்துகொண்டிருந்தது. மிகவும் அச்சமடைந்த அச்சுதன் சிவபிரானை நோக்கி "பெருமானே இந்த உருவம் நீங்கும் வழி ஏதோ சொல்லி அருளுவீர்" என்றார்.

மாயவனே என்பால் நீ கொண்ட அன்பினால் கூறிய வார்த்தையால் சாபம் பெற்றாய். பூமியின் தென் திசையில் திருவாலங்காடு என்னும் இடத்தில் நிற்கும் பாரிய ஆல மரப் பொந்தினுள் இருந்து தவம் செய்துகொண்டிரு. உரிய நாளில் நமது குமாரனான விநாயகன் அங்கு வருவான். அவனைத் தரிசித்ததும் உன்னை வந்தடைந்த பாம்பு உருவம் அகலும்— என்று கூறி விடைகொடுத்தருளினார்.

படைக்கலங்களினாலும், காலனாலும், மனிதராலும், தேவராலும், மரணம் சம்பவியாத அரியபெரிய வரத்தைச் சிவபிரானிடம் பெற்றவன் கயமுகாசுரன். அவனை விநாயகப் பெருமான் தனது வெள்ளைக் கொம்புகளில் ஒன்றை முறித்து, ஏவிச் சங்காரம் செய்து, அவனை எலி வாகனமாகக் கொண்ட பின்னர் திருவாலங்காட்டிற்கு வந்தார்.

விநாயகப் பெருமானின் வருகையை மனதினால் அறிந்த பாம்பு உருவம் கொண்ட நாராயணமூர்த்தி, அவரை எதிர்கொண்டு தரிசித்தலும், சாபம் நீங்கி, முன்னைய வடிவம் பெற்றார்.

ஐயனே தேவரீரைத் தரிசித்தால் சாப விமோசனம்

மூளாய்
**அருணாசலம்**

பெற்றேன். எனவே இத் தினத்தில் தங்களைப் பூசிக்க என் மனம் விரும்புகிறது. பூஜையை ஏற்றருள வேண்டும் — என்று கூறினார் நாராயணமூர்த்தி.

சிறந்த பூசையைப் பக்தியுடன் இயற்றிய விஷ்ணுமூர்த்தி 'பெருமானே மார்கழி மாதப் பூர்வ பக்கச் சந்திரனில் வரும் ஷஷ்டி எனப்படும் இன்றைய நாளில் யான் தேவரீரை அர்ச்சித்தது போன்று வழிபாடு செய்பவருடைய துன்பங்களை நீக்கி, அழிவில்லாத செல்வத்தையும் கொடுத்தருள வேண்டும்' என்று வேண்டினார்.

"அவ்வண்ணமே ஆகுக" என அருள் புரிந்தார் விநாயகப் பெருமான். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை சின்னத்தங்கச்சி

(ஐயனார் கோயிலடி, மல்லாகம்)

சின்னத்துரை சின்னத்தங்கச்சி 06-12-94 செவ்வாய்க்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பு சின்னத்துரையின் அன்பு மனைவியும், தவரத்தினமணி (ஆசிரியை நாகேஸ்வரி வித்தியாலயம், சுன்னாகம்), சிவபாக்கியம், நாகரத்தினம் (கனடா), முத்துலிங்கம் (கனடா), கனகரத்தினம் (கனடா), இராசலட்சுமி, காலஞ்சென்ற செல்வக்குமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கைலநாதர் ஆசிரியர், விசாலாட்ஷி வித்தியாலயம், மல்லாகம்), தங்கராசா (அச்சுவேலி), விமலேஸ்வரி (கனடா), கமலாலட்சுமி (கனடா), ராதா (கனடா), சிவகணேசன் (கனடா), காலஞ்சென்ற ரவீந்திரன் ஆகியோரின் மாமியாரும், தேன்மதி, நிரஞ்சன் (கனடா), சசிகுமார் (கனடா), விஜேந்திரகுமார் (கனடா), வகித்தகுமார், பகிந்தகுமார், பிரியசாந்தன் (கனடா), பிரியாயினி (கனடா), தர்சிகா (கனடா), விதுர்சன் (கனடா), நிரதர் (கனடா), சிறிகணன் (கனடா), சிறிசேந்தன் (கனடா), சிவதீபன், ராஜதீபன், லதாதீபன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், அருள்குமரன், நளாயினி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07-12-94 புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப் பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. க. கைலைநாதர்
(மருமகன்).

[சி-5751]

## வைத்திய கலாநிதி
## பொன்னையா வாகீசன்

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி, கேணியடியைச் சேர்ந்த வைத்திய கலாநிதி பொன்னையா வாகீசன் அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னார் பிரபல சட்டத்தரணி சின்னத்தம்பி பொன்னையா, திருமதி நாகேஸ்வரி [முன்னாள் உப அதிபர், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) தம்பதிகளின் ஏக புதல்வனும், ஆனந்தி[பொட்ஸ்வானா], Dr. வாசுகி [பொட்ஸ்வானா], சிவகாமசுந்தரி [லண்டன்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஈஸ்வரன் [பொட்ஸ்வானா], கைலநாதன் [பொட்ஸ்வானா], வைத்திய கலாநிதி வன்னியசேகரம் [லண்டன்] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 08-12-94 வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி பொ. நாகேஸ்வரி (தாயார்)
Dr. நடேசன் (மைத்துனர்)

[34098]

## பொன்னையா சிவசுப்பிரமணியம்

[Addi Director General Urban development Authority]

அச்சுவேலியைப் பிறப்பிடமாக கொண்டவரும், கொழும்பில் வசித்துவந்தவருமாகிய திரு. பொன்னையா சிவசுப்பிரமணியம் அவர்கள் 6 - 12 - 94 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா — சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும், மகேஸ்வரி [ஆவரங்கால்], பாலசுப்பிரமணியம் [இங்கிலாந்து], லோகேஸ்வரன் (பத்தமேனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரியின் அன்புக் கணவரும், சிவானந்தன் (கனடா), தயானந்தன் [உசன் - மிருசுவில்], நஞ்சிதமலர் [இங்கிலாந்து], விவேகானந்தன் [H. N. B.], ஆனந்தராணி [இந்தியா], காலஞ்சென்ற ஞானானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தினி, அனுசூயா, கஜேந்திரன், மீனா, கதிரேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், உமா, தர்ஷிகா, அம்பிகா, உஷா, சியாமினி, தயாளன், ரேணுகா, கார்த்திக், கிருஷ்ணா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 25 சி, 8 வது ஒழுங்கை, கொள்ளுப்பிட்டி, கொழும்பு - 3 இல் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
சி. தயானந்தன்
[மகன்]

உசன்,
மிருசுவில்.

(34099)

## திருமதி
## வைத்திலிங்கம் இலட்சுமிஅம்மாள்

வீரமாணிக்கதேவன் துறையை பிறப்பிடமாகவும் தற்போது சிவன் வீதி உரும்பிராய் கிழக்கில் வசித்த வருமான திருமதி வ. இலட்சுமி அம்மாள் நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், சிவயோகநாதன், திருமதி புனிதக்கிளி, சண்முகநாதன் (மோகன்), காலஞ்சென்ற அமரர் பரமநாதன் (சோதி - நாட்டுப்பற்றாளர்), அமரர் தங்கேஸ்வரன், வீரவேங்கை சஞ்சீவி, கப். நெடுமாறன் ஆகியோரின் அன்புத்தாயாரும், லலிதா, அமரர் சிறிதரன், கமலேஸ்வரி, நூட்லலிதா, கௌரி (யாழ். பல்கலைக்கழக கணிதப்பிரிவு) ஆகியோரின் மாமியாரும், மகேசினி, வீரவேங்கை பதுமநிதி, கண்ணன், சுரதா, சுது, சுபிலன், பிரசன்னா (கடற்புலிகள் — மகளிர்), நிரந்தரி (போராளி — புகைப்படப்பிரிவு), சஞ்சீவி (போராளி), நிசாந்தி, மாறன், தங்கா, வேணி, வத்சலா, தங்கா, லோகிதன், சுகந்தன், காயத்திரி, உமையவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

இவரது உடல் அன்னாரது விருப்பத்திற்கிணங்க யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு ஒப்படைக்கப்படுகின்றது. இன்று காலை 10.30 மணிக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினரிடம் வைபவரீதியாக ஒப்படைக்கப்படும்.

இவ் அறிவித்தலை போராளிகள் மாவீரர்-போராளிகள் குடும்பங்கள் மற்றும் ஏனையோரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ல. மோகன்
(மகன்)

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

(சி/9899)

### இலகுவான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டார்.

அதற்குப் பதிலளிக்கும் விதத்திலேயே இராணுவத் தளபதி முன் கண்டவாறு தெரிவித்தார். தாண்டிக் குளத்தில் வைத்து யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்களின் கருத்துப் பெறப்பட்டது. அவர்களில் மிகக் குறைந்தவர்களே பூநகரிப் பாதையைத் திறக்கவேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார்கள். மிக அதிகமானோர் தரைவழிப் பாதையான ஆனையிறவையே திறக்க வேண்டும் என்று விரும்பினர் — என்றும் இராணுவத் தளபதி சொன்னார்.

ஆனையிறவுப் பாதையைத் திறக்க அரசு தயாராக இருப்பதாக அவர் திரும்பத் திரும்பச் சொன்னார்.

அது சாத்தியமில்லை என்று 'ஆயர்கள்' மற்றும் குருமார்கள் தெரிவித்தபோது —

அப்படியானால் யாழ்ப்பாண மக்களை கப்பல்களில் கொழும்புக்கு அழைத்து வரலாம் — என்று ஜெரி டி சில்வா கூறினார்.

பூநகரிப் பாதை தற்போது போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லை. அது மிகவும் சேதமுற்ற நிலையில் உள்ளது — என்றும் இராணுவத் தளபதி ஒரு கட்டத்தில் சொன்னார்.

அதற்குப் பதிலளித்த மத குருமார்கள் —

கிளிநொச்சி அரச அதிபரிடம் தெரிவித்தால் அவர் பூநகரிப் பாதையை உடனே திருத்தி விடுவார்— என்று கூறினார். (அ-3)

### யுத்த நிறுத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதை திறப்பு — ஆகியவை குறித்து பேச்சுவார்த்தைக்கு முன் ஆராயப்படலாம் என்ற தலைப்பில் வெளியான பத்திரிகைச் செய்தியில் —

சமாதான பேச்சுவார்த்தைகளை சுமுகமாக தொடர்ந்து முன்னெடுத்துப் போவதற்கு வசதியாக மோதல்களை நிரந்தரமாக நிறுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் பற்றியும் —

வடபகுதி மக்கள் பாதுகாப்பாக பயணஞ் செய்வதற்கு வசதியாக பாதை திறப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் —

அரசாங்கத்தால் இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மணலாறில் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி மல்லி தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் பற்றி அடுத்த கட்டப் பேச்சுக்களின் போது ஆராயப்பட வேண்டும் என்றும் —

அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கென தயாரிக்கப்படக் கூடிய நிகழ்ச்சி நிரலில் இது சேர்க்கப்பட வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் கோரியிருப்பதாக அச்செய்தியில் கூறப்பட்டது.

மல்லி கொலை செய்யப்பட வேண்டிய சூழ்நிலை குறித்து இராணுவத்தினர் உள்ளக விசாரணை ஒன்றை மேற்கொண்டுள்ளனர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் நேற்று
# துப்பாக்கி முனையில் ரூ.76 லட்சம் கொள்ளை!

கொழும்பு, டிச. 8

வியாங்கொடையில் உள்ள வியாடெக்ஸ் நிறுவனப் பணியாளர்களுக்கு வழங்குவதற்கென வங்கியிலிருந்து எடுத்து வரப்பட்ட 76 லட்சம் ரூபா பணம் நேற்று நண்பகல் துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டது.

கொழும்பு டி. ஆர். விஜேவர்த்தனா மாவத்தையில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் இருந்து தனியாருக்குச் சொந்தமானபாதுகாப்புவாகனம் ஒன்றில் சம்பளப் பணம் எடுத்து வரப்பட்ட சமயம்—

மற்றுமொரு வாகனத்தில் வந்த கொள்ளையர்கள் தமது வாகனத்தை சம்பளப் பணம் எடுத்து வந்த வாகனத்துக்குக் குறுக்கே விட்டு அதனைத் தடுத்து நிறுத்தி, பணத்தை துப்பாக்கி முனையில் கொள்ளையிட்டுச் சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக நேற்று மாலை வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## தபால்களை கோமாரியில் அனுப்ப நடவடிக்கை

கடந்த மூன்று வாரங்களாக கொழும்புக்கு அனுப்பப்படாமல் தேங்கிக் கிடந்த தபால்களை, ''கோமாரி'' கப்பல் மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

யாழ். பிரதம அஞ்சல் அதிபர் திரு சு. கோமேஸ்வரன் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் இது பற்றிய தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த- ''பிளாம்பயன்'' கப்பல் மூலம் அனுப்பப்பட்டுவந்த தபாற்சேவை சீரற்ற காலநிலை காரணமாக கடந்த மூன்று வாரங்களாக தடைப்பட்டிருந்தது- இக் காலப்பகுதியில் சேர்க்கப்பட்ட அனைத்து அஞ்சல் பொருள்களையும் 'கோமாரி' கப்பல் மூலம் அனுப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன —

''கோமாரி'' கப்பல் மூலம் அனுப்பப்படும் கடிதங்களுடன் சேர்க்கப்படுவதற்காக, கடிதங்களை அனுப்ப விரும்பும் பொதுமக்கள் தங்கள் கடிதங்களை தமது வதிவிடங்களுக்கு அண்மையிலுள்ள அஞ்சல் அலுவலகங்களில் இன்றே தபாலில் சேரக் கூடியதாக அஞ்சலில் சேர்க்குமாறு கோரப்படுகின்றார்கள்-

அல்லது யாழ். பிரதம அஞ்சல் அலுவலகத்திலுள்ள தபால் பெட்டிக்குள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு முன்னர் கடிதங்களைச் சேர்க்கலாம் — என்று பிரதம தபாலதிபர் தமது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (அ)

### இரகசியப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளது. — இவ்வாறு அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஒன்று வருமானால் அதைப் பயன்படுத்தி புலிகள் ஏனைய தமிழ்க் குழுக்களை அழிக்க முற்படுவர் என தெற்கில் உள்ள தமிழ்க் குழு ஒன்றின் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டார். (உ-க-சு-3-6)

### 7 ஆயிரம்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை துறையில் உள்ள சேதமுற்ற மற்றொரு இழுவைப் படகைத் திருத்தி அதனைப் பயன்படுத்தி மண்ணெண்ணெய் இறக்க முயற்சி எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது கடல் கொந்தளிப்பாக இருப்பதால் —முன்னர் போல—மண்ணெண்ணெய் பரல்களை இழுவைப் படகுகளைப் பயன்படுத்தாமல் கடலில் இறக்கி, கரைக்கு கட்டி இழுத்து வர முடியாதிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

''மாஹேரா'' கப்பலிலுள்ள மண்ணெண்ணெயை ஓரிரு தினங்களுக்குள் இறக்கி, மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### பூநகரி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மில்லாத பிரதேசமாக — பிரகடனம் செய்து, அங்கு நிலைகொண்டுள்ள படையினரை சற்று அகற்றி செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அல்லது அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் மூலம் கண்காணிப்புடன் போக்குவரத்துக்கு அந்தப் பாதையைத் திறக்கவேண்டும்.

அப்படித் திறக்கும் பட்சத்தில், இலங்கை வரும் பரிசுத்த பாப்பரசரை யாழ். கத்தோலிக்க மக்கள் தரிசிக்க வாய்ப்பு ஏற்படும்— என்றுள்ளது.

இம்மகஜரின் பிரதிகளை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஹமில்டன் வனசிங்கா ஆகியோருக்கும் ஆயர் அனுப்பியுள்ளார்.

### ஸ்ரீலங்கா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதவுதல், சார்க் நாடுகளுக்கு இடையிலான உறவு ஆகியவை குறித்து இந்தியத் தரப்புடன் விரிவாகப் பேசுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-க-3-6)


உ
சிவமயம்

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோயில்

விநாயக சஷ்டி உற்சவமும் கஜமுகா சூரன் போரும்

காலம்: இன்று 08 – 12 – 1994 வியாழக்கிழமை

நேரம்: முற்பகல் 8-30 மணி முதல்

காலை 7-00 மணி — காலைப் பூசை
8-30 மணி — சங்காபிஷேகக் கிரியைகள் ஆரம்பம்
10-30 மணி — சங்காபிஷேகம்
நண்பகல் 12-00 மணி — நண்பகல் பூசை
பிற்பகல் 12-30 மணி — பஞ்சமுகார்ச்சனை
பிற்பகல் 2-00 மணி — மாலைப் பூசை
2-30 மணி — பிள்ளையார் கதைப் படிப்பு
4-00 மணி — வசந்த மண்டபப் பூசை
4-30 மணி — ஸ்ரீபஞ்சமுக விநாயகப் பெருமான் உற்சவம் (வெளி வீதி)

விசேட மங்கள இசை: ஜெகன் குழுவினர்

★ N. K. பத்மநாதன்
★ V. K. பஞ்சமூர்த்தி
★ S. S. சிதம்பரநாதன்
★ R. கேதீஸ்வரன்
★ S. சிறிதரன்

★ N. K. வீராச்சாமி
★ K. நித்தியானந்தம்
★ K. சிவகுமார்
★ T. உதயசங்கர்
★ R. பாஸ்கரன்

உபயகாரர்

[சி-9894]


## கள்ள சான்றிதழ் வழங்கிய முகவர் நிறுவனம் சிக்கியது

கொழும்பு, டிச. 8

கொழும்பு மத்தி டயஸ் பிளேஸில் கடந்த ஒரு வருட காலமாக இயங்கி வந்த — மோசடி வேலைகளில் ஈடுபட்டிருந்த — ஏஜென்ஸி (முகவர் நிலையம்) ஒன்றை பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் சம்பந்தப்பட்ட ஏஜென்ஸியை சுற்றி வளைத்த வாழைத்தோட்ட பொலீஸார், அந்த ஏஜென்ஸியின் மோசடி வேலைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட அச்சகம் ஒன்றையும் கண்டுபிடித்தனர்.

பிறப்பு, இறப்பு, விவாக, பரீட்சை சான்றிதழ்கள், வெளிநாட்டு கடவுச் சீட்டுக்கள், உள்நாட்டு — வெளிநாட்டு சாரதி அனுமதிப் பத்திரங்கள் ஆகியவற்றை கள்ளமாக அச்சிட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்குவது என்ற போர்வையில் இந்த ஏஜென்ஸி நிறுவனம் விநியோகித்து வந்ததாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக வடக்கு, கிழக்குடன் தொடர்புடைய நான்கு தமிழர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கள்ள பாஸ்போட் — ஐயாயிரம் ரூபா, சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரம் — ஆயிரம் ரூபா, உள்நாட்டு சாரதி அனுமதிப் பத்திரம்—ஐந்நூறு ரூபா, ஜி.சி.ஈ (உயர்தரம்) பரீட்சை சான்றிதழ் — ஐயாயிரம் ரூபா, ஜி.சி.ஈ (சாதாரண தர) பரீட்சைச் சான்றிதழ் —மூவாயிரம் ரூபா என்ற அடிப்படையில் இந்த நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்டு வந்துள்ளமை கண்டு பிடிக்கப் பட்டுள்ளதாம்.

## பொலிகண்டியில் விசர்நாய் குதறியதில் ஒருவர் படுகாயம்
### சாரத்தை விட்டு ஓடியவர் தப்பினார்

யாழ்ப்பாணம், டிச. 8

விசர் நோயினால் பிடிக்கப்பட்ட நாயினால் கடித்துக் குதறுண்டு படுகாயமடைந்த ஒருவர் நேற்று மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்; மற்றொருவர் அந்த நாயின் கடியில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக நாய் கவ்விப் பிடித்த தமது சாரத்தைக் கழற்றி விட்டு விட்டு நிர்வாணமாக ஓடித் தப்பித்துக்கொண்டார்; ஒரு மாடும் ஒரு பூனையும் அந்தநாயினால் கடித்துக் குதறிக் கொல்லப்பட்டன.

பொலிகண்டி சமரபாகு பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சீனியர் சதாசிவம் (வயது 51) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

விசர் நோயினால் பீடிக்கப்பட்டு ஆவேசமடைந்த நிலையில் ஓடிக்கொண்டிருந்த நாய், கால்நடைகளைக் கடித்துக் கொன்ற பின்பே காயமடைந்தவரைக் கடித்துக் குதறியது.

காயமடைந்தவர் கையில் வைத்திருந்த கத்தியால் அடித்தும், வெட்டியும் நாய்க் கடியில் இருந்து உயிர் தப்பினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-15)

## சுகாதாரம் பேணுவதற்கு திடீர் பரிசோதனைகள்

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ். நகரில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையொன்றில், காலாவதியான ரின்பால் விற்பனை செய்யப்பட்டு வந்ததை தமிழீழ சுகாதாரப் பகுதியினர் தமது திடீர் பரிசோதனையின் போது கண்டுபிடித்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

அக்கிளையில் விற்பனைக்காக இருந்த ஏனைய கட்டிப் பால் தொகுதியை மேல் விசாரணைக்காக அவர்கள் பறிமுதல் செய்தனர்.

பொதுமக்கள் தமக்குத் தேவையான உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது, பாவனைக்குரிய திகதியைப் பார்த்து, அவதானமாகக் கொள்வனவு செய்யுமாறு தமிழீழ சுகாதாரப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை —

யாழ். நகரின் பிரதான சந்தியொன்றில், அப்பிள் பழங்களை — நிலத்தில் — சுகாதாரமற்ற முறையில் — உரப்பையின் மேல் வைத்து விற்பனை செய்த நடமாடும் வியாபாரி ஒருவர் தமிழீழ சுகாதார சேவை உணவுப் பரிசோதகர்களின் திடீர்ப் பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டு, கடுமையாக எச்சரிக்கப்பட்டார். (உ-3)

## அரச அதிபர் நாளை வருகை

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ். அரச அதிபராக இடமாற்றம் பெற்றுள்ள திரு. கே. பொன்னம்பலம் நாளை யாழ்ப்பாணம் வந்து தமது பொறுப்பை ஏற்கவிருக்கிறார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு கூட்டத்தில் கலந்து கொண்ட அரச அதிபர், யாழ் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள உணவுப் பொருள் தட்டுப்பாடு உட்பட மற்றும் அவசர, அவசிய விடயங்கள் குறித்து அங்கு விளக்கினார்என்று தெரிய வந்தது. புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அதிகாரிகளுடனும் அவர் பேச்சு நடத்தினாரென அறியப்பட்டது (உ-3)

## ஹெலிநோட்டம்

யாழ்ப்பாணம், டிச. 8

பலாலி இராணுவமுகாம் சுற்றுப்புறப்பகுதிகளில் இருந்து, மாதகல், பண்டத்தரிப்பு பகுதி வரை உள்ள இடங்களை உள்ளடக்கி நேற்று அதிகாலை 3-30 மணிக்கு ஹெலி ஒன்று வட்டமிட்டுச் சென்றது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதி மக்கள் பீதியடைந்த நிலையில் காணப்பட்டனர்.

இதேவேளை காரைநகர் இராணுவமுகாமில் உள்ள படையினர் தேடுதல் வெளிச்சம் பாய்ச்சிக் கொண்டு கரையோரப் பகுதிகளைக் கண்காணித்துக் கொண்டிருந்தனர். [இ-15]

## விளையாட்டு நிகழ்வுகள்

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம் சிறிபாஸ்கரன் விளையாட்டரங்கில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன. பங்கு கொள்ளும் அணிகள் வருமாறு:—

★ பிற்பகல் 2.30 மணி:— ஞானமுருகன் ''ஏ'' அணி எதிர் ஞானமுருகன் ''பி'' அணி.

★ 3.30 மணி:— றோயல் வி.க அணி எதிர் விநாயகர் அணி.

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை ஞானகுரு

[கோண்டாவில் றோட் இருபாலை]

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வதிவிடமாகவும் கொண்டிருந்த முருங்கன் குமரன் மில் உரிமையாளர் செல்லத்துரை ஞானகுரு [இளையஐயா] அவர்கள் நேற்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தண்டையல் செல்லத்துரை தம்பதிகளின் இளைய புதல்வனும், சறோஜினிதேவியின் [வண்ணம்] அன்புக் கணவரும், சந்திரா, சிறிகாந்த் [கனடா], உஷா, குமரன், அகிலன், அமுதா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்

கோண்டாவில் றோட்,
இருபாலை.

(34100)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (... றவேற்) லிமிட்டெட்டினால் ... யாழ்ப்பாணம் ... வீதி 20 ... இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08 ... வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org